Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 41 • 04.05.2016


16வது ஆண்டில் தீபம்

CELEBRATING 16 YEARS


DEEPAM TV :
UK | EUROPE
MIDDLE EAST | CANADA

DEEPAM TV இல் விளம்பரங்களை மேற்கொள்வதற்கு அழையுங்கள்...

Contact : 077 476 5990
E-mail : ceo@deepam.lk







# முன்னாள் போராளிகள் கைது

பின்னணியில் மகிந்த?

மீண்டும் முன்னாள் போராளிகள் கைது படலம் ஆரம்பித்துள்ளது. திடீர்திடீரென முன்னாள் போராளிகள் காணாமல் போகிறார்கள். அதிலும் குறிப்பாக நன்கு அறியப்பட்ட தளபதிகள் குறிவைக்கப்படுவது ஏன்? அதன் பின்னணியில் மகிந்த ராஜபக்ச இருக்கிறாரா?


தொடர்ச்சி 6-ம் பக்கம்




## வவுனியா பொருளாதார மத்தியநிலையம் எப்பொழுது முடியும் இழுபறி?

'வடக்கில் முதலாவது பொருளாதார மத்தியநிலையம் அமையவுள்ளது. நிதி கூட ஒதுக்கியாகிவிட்டது. ஆனாலும் திட்டம் திண்டாடுகிறது. காரணம்... எங்கே அமைப்பதென்ற இழுபறி. பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு வவுனியாவில் பொருத்தமான இடம் எது? ஒரு முழுமையான ஆய்வு.

தொடர்ச்சி 8-ம் பக்கம்



தென்னிலங்கை ராஜதந்திரத்தை சமாளிக்குமா தமிழர் தரப்பு? 4



பெண்ணெழுத்து: புதிய தொடர் 16



மெழுகுவர்த்தியான சக்கரவர்த்திகள் 21

# சொன்னார்கள்

## சம்பந்த பாடம்

எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் பரவிப்பாஞ்சானில் விடுவிக்கப்படாத மக்கள் குடியிருப்புக்களிற்குள் மக்களுடன் சென்றதுதான் இன்றைய இலங்கை அரசியலின் சூடான விவாதப்பொருள். தென்னிலங்கையில் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான விவகாரமாக சில ஊடகங்களாலும், மகிந்த ராஜபக்ச ஆதரவு அரசியல்வாதிகளாலும் சித்தரிக்கப்பட்டு கொண்டிருக்கிறது இது.

பரவிப்பாஞ்சானில் உள்ள இராணுவமுகாமிற்குள் நுழைந்ததன் மூலம் தேசியபாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என மகிந்த ஆதரவு அணி போட ஆரம்பித்த கூச்சல் இன்னும் ஓயவில்லை. சம்பந்தர் மக்களுடன் அந்த முகாமிற்குள் நுழைந்ததன் மூலம் நாட்டிற்கு என்னவிதமான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்பதை எந்த தரப்பும் தெளிவாக கூறவில்லை.

உண்மையில் பரவிப்பாஞ்சானில் படைமுகாம் அமைந்துள்ள பிரதேசம் பொதுமக்களின் காணிகள். அரசகாணிகள் அல்ல. தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட சில காரணங்களின் நிமித்தம் பொதுமக்களின் காணிகளை அரசால் சுவீகரிக்க முடியும். ஆனால் அதற்கான பொறிமுறையொன்று உள்ளது. மக்களிற்கு நட்டஈடு, மாற்று காணி வழங்கல் என கைக்கொள்ள வேண்டிய விடயங்கள் பல. பரவிப்பாஞ்சான் மக்கள் காணிகள் எந்த நடைமுறையும் பின்பற்றப்படாமல் கையகப்படுத்தப்பட்டவை.

மக்கள் வவுனியா அகதிகள் முகாம்களிற்குள் அடைபட்டிருந்த சமயத்தில் வன்னிப்பகுதியில் இராணுவம் விரும்பிய இடத்தில் முகாம் அமைத்திருந்தது. கிளிநொச்சி நகரப்பகுதிலேயே பெருமளவு நிலம் இராணுவத்தின் பிடியிலிருந்தது. பரவிப்பாஞ்சான் தொடக்கம் பழைய கச்சேரி வரையும் பெருமளவு காணிகள் படையினர் வசமிருந்தது.

தமது நிலங்களில் குடியமர வேண்டுமென்பதுதான் இடம்பெயர்ந்த எல்லா மக்களினதும் முதலாவது தேவை. சொந்த நிலங்களிலிருந்து விரட்டப்படுவதென்பது மனிதர்கள் சந்திக்கும் பயங்கரங்களிலொன்று. சொந்த நிலங்களிற்கு திரும்பிய பின்னர்தான் உயிரைவிடுவோம் என நாளெல்லாம் சொல்லியபடி தள்ளாடிக் கொண்டிருக்கும் முதியவர்கள் ஏராளம் பேருள்ளனர். ஆனால் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்கும் விடயத்தில் இன்னும் இழுபறி உள்ளது. கணிசமான காணிகள் விடுவிக்கப்பட்டாலும், உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் பெரிய நிலப்பரப்புக்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது பெரும் மனிதாபிமான நெருக்கடியை தோற்றுவித்துள்ளது.

சொந்தமாக காணியில்லையென்பது, வீடு இல்லையென்பது குடும்பங்களின் கட்டமைப்பையே குலைத்துப் போட்டு விடுவது. காணி, வீட்டை மையமாக கொண்டமைந்த தமிழர் குடும்ப அமைப்பில் அகதிகள் படும்பாடு மிகத் துயரமானது. சொந்த நிலங்களிற்கு திரும்ப முடியாத குடும்பங்களில் திருமணம் முடிக்காத பல பெண்கள் உள்ளனர். தமது பிள்ளைகளிற்கு முறையான திருமணத்தை நடத்தி வைக்க முடியாத குற்றஉணர்வில் குறுகிக் கொண்டிருக்கும் பெற்றோர்களின் எண்ணிக்கையை யாரறிவர்?

இந்த மக்களின் ஒரே இலக்கு சொந்த நிலங்களிற்கு திரும்புவது. பரவிப்பாஞ்சான் மக்கள் காணிகள் விரைவில் விடுவிக்கப்படலாமென்ற எதிர்பார்ப்பும் உள்ளது. மக்களின் எதிர்பார்ப்பை, அந்த மக்களின் பிரதிநிதி நிறைவேற்றியுள்ளார். காவலத்துறையும் இந்த விடயத்தை தெளிவுபடுத்திவிட்டது. சம்பந்தன் அத்துமீறி நுழையவில்லை, நுழைவாயிலை கடந்து சென்று முன்பகுதியை பார்வையிட்டார் என்பது அவர்களின் அறிவிப்பு.

தமிழர்களின் அரசியலால் நாட்டின்தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்பது நகைச்சுவையான விடயம். ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப்பரவலாக்கம் பற்றி யுத்தத்தின் பின்னர் தமிழ் மிதவாத தலைமைகள் தொடர்ந்து பேசி வருகின்றனர். இலங்கையின் ஐக்கியத்திற்கு குந்தகம் விளைவிக்கும் எந்த அரசியல் முன்னெடுப்பும் அவர்களால் செய்யப்படவில்லை. சில வருடங்களின் முன்னர் அப்போதைய பொதுஎதிர்க்கட்சிகளால் நடத்தப்பட்ட மேதின நிகழ்வில் சிங்கக்கொடியை ஏந்தி நின்ற சம்பந்தன் சந்தித்த விமர்சனங்கள் அனேகம். குறிப்பாக தமிழ் தரப்பிலிருந்தும் கணிசமான விமர்சனங்கள் எழுந்தன.


எனினும், இன்று அந்த விமர்சனங்கள் செயலிழந்து விட்டன. முழு இலஙகைத்தீவும் இனநல்லிணக்கம் பற்றி பேசும் காலகட்டத்தில் சம்பந்தரின் செயலும் ஒரு முன்னுதாரணமாக கொள்ளத்தக்கதாக அமைந்தது. சம்பந்தர் முன்னோக்கி வைத்த காலடியது. சிங்கள ஆட்சியாளர்கள் பதிலுக்கு முன்னோக்கி நகர வேண்டியிருந்தது.

பரவிப்பாஞ்சான் விவகாரத்திலும் "நான் ஒரு இலங்கையன். எங்கு செல்லவும் உரித்துண்டு" என்கிறார் அவர். இந்த விவகாரத்தில் இனவாத தீ வளர்க்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் இது. இலங்கைத்தீவு எல்லா மக்களிற்கும் உரியது. ஒரு தொகுதி மக்களை அகதிகளாக பேணிக் கொண்டு, இலங்கை முன்னால் நகரவே முடியாது.




**பிரசன்ன ரணதுங்க – எம்.பி**

கூட்டு எதிர்க்கட்சி என்ற சொல்லை பாவிக்க முடியாதென்றால் நல்லாட்சி என்ற சொல்லையும் பாவிக்க முடியாது. கூட்டு எதிர்க்கட்சியென்ற பெயரை பாவிக்க முடியாமல் செய்ய முடியுமென்றால் செய்து பாருங்கள். அதிகாரத்தை பயன்படுத்தாமல் நீதிமன்றத்தை நாடித்தான் இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும்.




**சுஜீவ சேனசிங்க – பிரதியமைச்சர்**

ஐக்கிய தேசியக்கட்சியின் விடியல் தற்போதுதான் ஆரம்பமாகியுள்ளது. அடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான். ஜே.ஆர், பிரேமதாசா காலம்போல அடுத்த ஐந்து வருடத்தில் எமது சிறந்த அரசியல்களத்தை உருவாக்குவது நிச்சயம்.



**சுந்தரம் மகேந்திரம் – காணாமல் போனவர்களை தேடிக்கண்டறியும் குழு**

வடக்கில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறினாலும் இன்று ஜனநாயகரீதியில் எவரும் கைது செய்யப்படுவதில்லை.சிவில் உடையில் வந்து, வெள்ளைவானில் கடத்திச் செல்லப்பட்டு பொலிஸ்நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் அவர்கள் உரியமுறையில் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும்.



**டிலான் பெரேரா – இராஜாங்க அமைச்சர்**

சுதந்திரக்கட்சியின் தலைமையை ஜனாதிபதி ஏற்றிருக்காவிட்டால் மகிந்த, கோத்தா, பசில் ஆகியோர் சிறைக்கு சென்றிருப்பார்கள். மகிந்த வெற்றிபெற்றவுடன் பசில் நாட்டைவிட்டு தப்பியோடியவர். மகிந்த தோற்று 24 மணித்தியாலத்திற்குள் அவரை கைவிட்டு ஓடியவர்கள் இப்பொழுது வந்து குழப்ப அரசியல் செய்கிறார்கள்.



**சனத் நிசாந்த – எம்.பி**

எங்கள் மீது சுதந்திரக்கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாயின் முதலில் மைத்திரி மீதுதான் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்தான் கட்சியைவிட்டு விட்டு ஐ.தே.கவுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டார்.



**நிஷாந்த வர்ணசிங்க – ஜாதிக ஹெல உறுமய**

பரவிப்பாஞ்சான் முகாமிற்குள் நுழைந்த விடயத்தில் சம்பந்தனை மட்டும் குற்றம் சொல்ல முடியாது. அவர் அனுமதி பெறவில்லையென தெரிந்தும், உள்ளே அனுமதித்த சிப்பாய்களையும் விசாரிக்க வேண்டும். இந்த விடயத்தை பெரிதாக்கி நல்லிணக்க நடவடிக்கைகளையும் குலைக்ககூடாது.

## க்ளிக் பக்கம்


அழகிய பொன்மாலைப் பொழுதொன்றில் கொழும்பு கங்காராம பூங்காவில் எடுத்த படம். வானமும் நீரும் ஒன்றாக சேர்ந்திருக்கும் அதிசயம்.

**என்னைப்பற்றி:** யாழ் உயர்தொழில்நுட்பவியல் கல்லூரியில் சுற்றுலாத்துறையும், விருந்தோம்பலும் கற்கைநெறியை பூர்த்தி செய்துள்ளேன். இடையிடையே படங்கள் எடுப்பதுண்டு.



படப்பிடிப்பாளர்: **கிருஸ்ணாளினி**

இடம்: **கங்காராம பூங்கா**



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk

**தீபம்**

211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562

சந்தா : subs@deepam.lk ☎ 0768255566

விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567

செய்திகளுக்கு : news@deepamnews.com



**www.facebook.com/thamilselvan.murukaiya**

இன்று தினப்பத்திரிகைகளின் முதற் பக்கத்தில் மட்டும் வந்த சில செய்தித்தலைப்புகள்:
"தென் பகுதி மீனவர்கள் முல்லையில் அடாத்து"
"புலிகளின் தளபதி நகுலன் ரி.ஐ.டியால் நேற்று கைது"
"சிறுமியைக் கடத்திய சிப்பாய்"
காரணம் சூறுகிறார்கள் பேரினவாதத்தின் தமிழ்ச் சேவகர்கள்:
"நீங்கள் சும்மா இருக்கேலாமல் சுதந்திரம் கேட்கிறீர்கள், தனித் தேசம் ப்றிப் பேசுகிறீர்கள், விடுதலை வேண்டும் என்கிறீர்கள்....
அப்பிடியெல்லாம் கதைச்சால் "மாத்தையாமாருக்குக்" கோபம் வருந்தானே!
அதாலைதான் இப்பிடி நடக்குது...
மூடிக் கொண்டிருங்கள், கிடைத்தது போதுமென வாழப்பாருங்கள்...
ஒண்டும் நடக்காது!"
மாற்றம் வேண்டும் மைத்திரி வரட்டும்
கிடைக்கும் எமக்கு ஜனநாயக இடைவெளி...
அந்த இடைவெளிக்குள்
நாமெல்லாம் புகுந்து விளையாடுவோம்,
போராடுவோம், குரல் கொடுப்போம்,
கத்தியின்றி, இரத்தமின்றி, உயிர் இழப்பேதுமனி;றி
அன்பாக, அமைதியாக, பண்பாக,
கண்ணியமாக, சுகமாக, ஜாலியாக
வாழ்க்கையை கொண்டாடியபடி,
நக்கி, சூப்பி,
இன்பம் அனுபவித்தபடி
வாழைப்பழத்துக்குள் ஊசியை நுழைப்பது போல
மெல்ல மெல்ல... மெல்ல மெல்ல.. மெல்ல மெல்ல
நம் விடுதலையை வென்றெடுப்போம்
என தத்துவம் சொல்லி, எம்மை தோற்கடித்து சிங்களத்தை வெல்ல வைத்த, எமதருமை உடன் பிறப்புகளே....
உங்களிடம் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்
கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்...
அந்த ஜனநாயக இடைவெளியை பெற்றுத் தந்த உங்களுக்கு கோடான கோடி நன்றி!
ஆனால், அதற்கு மேல் எமக்கு வகுப்பெடுக்காது இருங்கள்.
நீங்கள் அடுத்த தேர்தலில் பேசுங்கள்... அதுவரை உங்களுக்கு கிடைக்கப்பெற்ற சுக போகங்களை அனுபவியுங்கள்!
மக்கள் தங்கள் உரிமைகளுக்காகவும், வாழ்வாதாரங்களுக்காகவும் போராடுவர்.
அவர்கள் தம் தலைவிதியைத் தீர்மானிக்கட்டும்.
நீங்கள் தேர்தல் காலங்களில் மட்டும் உங்கள் பிழைப்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்.
பாவம் எமது மக்கள்.



வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வாழ்வெழுச்சித் திணைக்களத்தின் சின்னப்புதுக்குளம் சமுர்த்தி வங்கிக்கு உட்பட்ட 14 கிராம மக்கள் ஒன்றிணைந்து கொண்டாடிய புது வருட நிகழ்வு அண்மையில் நடந்தது.






**www.facebook.com/kishoker.yuva**


பாணா காத்தாடி படம் நான் பார்தது என் டார்லிங் யுவனுக்காக. ஆனால் சுமாராக இருந்தாலும் பக்கத்து வீட்டுப் பெண்போல் இருந்த அந்த நடிகையை எனக்கு பிடித்துப்போனது. பின்னாளில் அழகு ஏற்றுகிறேன் பேர்வழி என்று பிளாஸ்டிக் சேர்ஜரி செய்து கொண்டு சுமாராக இருந்த முகத்தையும் ரொம்ப சுமாராக மாற்றிக் கொண்டார். மூன்றாவது சேர்ஜரிக்கு பின்னர் எம்பாம் பண்ணாமல் மூன்று நாள் வைத்திருந்த பிணம் போல ஆனது முகம். முகத்தில் அப்படியே சாவு களை. மூன்று தடவை சர்ஜரி பண்ணியும் முகத்தில் முன்னேற்றம் இல்லை. போதாத குறைக்கு அம்மணியின் ரசிக குஞ்சுகள், அம்மணிதான் எக்ஸ்பிரஷன் குயின் என்று ஏற்றி விட, அம்மணி எக்ஸ்பிரஷன் காட்டுகிறேன் பேர்வழியென்று திரையில் வாயை கோணியும், இழுத்தும் , பிதுக்கியும் செய்த, செய்கிற வன்முறைகள் சொல்லி மாளா. அஞ்சானிலும், தெறியிலும் சாவடி. சமீபத்தில் லேடி கமல்ஹாசன் என்று அம்மணியின் அடிவருடி ஒருவர் , அம்மணி நடித்துக்கொண்டிருக்கும் அல்லது நடித்த படத்தின் ஸ்டில்களை க்ளோசப்பில் போட , யாரோ ஒரு காமன் மேன் அதை எடுத்து பான்பராக் சாப்பிட்டால் வாய் இப்படித்தான் ஆகும் என்ற ரேஞ்சில் மீம் செய்யும்படியாய் போனது.
தமிழ் சினிமாவின் மோஸ்ட் ஓவரேட்டட் நடிகை இவர் தான். "நான் ஈ"யில் கொஞ்சம் ஒக்கே. சமந்தாவின் வாழ்வில் இருந்து நாம் கற்க வேண்டியது ஒன்று தான். பிளாஸ்டிக் சேர்ஜரி உடல் நலத்துக்கு கேடு. இன்று பிறந்தநாளாம் யாராவது பால் ஊத்துறீங்களாப்பா?



# தென்னிலங்கை ராஜதந்திரத்தை சமாளிக்குமா தமிழர் தரப்பு?

கருணாகரன்



மிக நுட்பமாகக் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது கொழும்பு. மெல்ல மெல்ல தன்மீதான அழுத்தங்களைக் கடப்பதில் அது வெற்றியடைந்து வருகிறது. இந்த வகையில் சீனாவுக்குச் சென்று வெற்றிக் கொடியுடன் திரும்பியிருக்கிறார் ரணில். ரணிலின் சீன விஜயத்தையிட்டு மேற்குலகம் முகம் சுழிக்கவில்லை. அப்படி மேற்கின் முகச்சுழிப்புக்கு இடமளிக்கக்கூடாது என்று இந்த விவகாரத்தைக் கவனமாகக் கையாண்டிருக்கிறார் அவர். மகிந்த ராஜபக்ஸவின் அரசாங்கம் சீனச்சாய்வை அதிகளவில் கொண்டிருந்ததாலேயே மேற்கின் எதிர்ப்புக் கணைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. இதை மதிப்பிட்ட ரணில் சீன உறவை மிகக் கவனமாகக் கையாள்கிறார். அப்படியே மேற்கின் நட்பையும் பராமரிக்கிறார். இந்த நுட்பம் சிங்கள இராசதந்திரத்துக்குக் கைதேர்ந்த ஒன்று.

பொதுவாகவே சிங்களத்தரப்பின் இராசதந்திர நிபுணத்துவம் சிறப்பானது. என்றபடியால்தான், அது யுத்தத்திற்கான சர்வதேச ஆதரவைச் சிறப்பாக ஒருங்கிணைத்தது. இன ஒடுக்குமுறையைப் பேணிக் கொண்டே, அந்த ஒடுக்குமுறையை மேற்கொள்ளும் யுத்தத்திற்கான சர்வதேச அங்கீகாரத்தையும் ஒத்துழைப்பையும் பெற்றது சாதாரணமான ஒன்றல்ல. யுத்தத்தின் இறுதிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட யுத்தமீறல்களை யுத்தக் குற்றங்களைக் கூட சிங்களத் தரப்பு மிக லாவகமாகப் புறந்தள்ளி வருகிறது. அல்லது அதைப்பற்றிய பேச்சுகளையும் அழுத்தங்களையும் அது விரைவாகவே மென்னிலைப்படுத்தியது. இப்பொழுது அதையும் தணித்து வருகிறது.

மட்டுமல்ல, யுத்தத்திற்குப் பின்னரான அமைதிச் சூழல், இராணுவ விலக்கல், நிலவிடுவிப்பு, அரசியற் கைதிகளின் விடுதலை, யுத்தப்பாதிப்புக்கான நிவாரணம் மற்றும் மீளமைப்பு, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்றவற்றைப் பற்றிய வெளியுலகின்

**சிங்கள ஆட்சியாளர்களிடம் பொதுவாகவே ஒரு ஒழுக்க விதியுண்டு. நிபுணத்துவ ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளும் மதிக்கும் அனுசரிக்கும் பண்பியல் ஒழுக்கம் இது. இதனால் அவர்கள் நெருக்கடிகளைக் கடப்பதில் வெற்றியடைந்து வந்திருக்கின்றனர்.**

அழுத்தங்களையும் அது மென்னிலைப்படுத்தி விலக்கி வைத்திருக்கிறது. பதிலாகத் தமது தேவைக்கேற்ற வகையில் வெளியுலக உறவை வடிவமைத்துக் கொண்டிருக்கிறது.

மேற்கின் நலனோம்பு அரசாங்கத்தையே ரணில் நடத்திக் கொண்டிருக்கிறார் என்று சொல்லப்பட்டாலும் விதிகள் கணிப்புகள் எல்லாவற்றையும் மீறி, சீன, இந்திய, மேற்கு உறவுகளைச் சமநிலைப்படுத்த முயற்சிக்கிறார் ரணில். அப்படியொரு தேவை இலங்கைக்கும் அவசியம். ஏனென்றால், இன்றைய இலங்கைக்கு சீனாவைப் புறக்கணித்துக் காரியங்களைச் சாதிக்க முடியாது. சீனாவை மட்டுமல்ல எந்த ஒரு சக்தியையும் வெளியில் தள்ளி வைப்பதற்கு

கொழும்பு விரும்பவில்லை. அப்படித் தள்ளி வைப்பதனால் உண்டாக்கக் கூடிய தீய விளைவுகளை கொழும்பு கடந்த இரண்டு சந்தர்ப்பங்களில் தெளிவாக உணர்ந்தது. ஒன்று ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் காலத்தில் மற்றது மகிந்த ராஜபக்ஸவின் காலத்தில். இருவரும் கடும்போக்காளர்கள். இருவரும் சார்பு நிலைப்பட்ட அரசியலையே மேற்கொண்டவர்கள்.

ஜே.ஆர், அன்றைய சூழலில் இந்தியாவைப் புறந்தள்ளி, மேற்குலகத்துடன் நெருக்கமான உறவைப்பேணும் அரசியலை முன்னெடுத்தார். இதனால், கொழும்பின் மீதான இந்திய நெருக்கடிகள் அதிகரித்தன. ஒரு கட்டத்தில் அதிகரித்த அழுத்தங்களையும் நேரடியான இந்தியத்தலையீட்டையும் இலங்கை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. அதாவது கடும்போக்கும் சாய்வுநிலைப்பாடும் வெளிச்சக்தியின் தலையீட்டுக்கு வழியேற்படுத்தியது. ஜே.ஆர் அரசியற் சாணக்கியம் தடுமாறத்தொடங்கியது.

மகிந்த ராஜபக்ஸ மேற்குலகத்தைப் புறந்தள்ளிவிட்டு, சீனாவுடன் தேனிலவிற் கலந்தார். இதனால் இந்திய மேற்குலகக் கூட்டணியின் எதிர்ப்பைச் சம்பாதித்தார். மகிந்தவின் இந்தச் சாய்வு அரசியலும் கடும்போக்குமே இலங்கையின் மீதான மேற்குலக மனித உரிமை அமைப்புகளின் அழுத்தங்களுக்கு இடமளித்தன. ஒரு கட்டத்தில் இலங்கை விவகாரங்களில் குறிப்பாக உள்நாட்டு அரசியலில் வெளிச்சக்திகள் தங்கள் மூக்கை நீளமாக நுழைக்கும் அளவுக்கு நிலைமைகள் மாறியிருந்தன. தான் சேர்த்துக் கொண்ட கீர்த்திகளையும் பலத்தையும் மகிந்த ராஜபக்ஸ கைவிட்டுச் செல்ல வேண்டியதாயிற்று.

அப்படியென்றால், இந்தச் சந்தர்ப்பங்களில் சிங்கள இராசதந்திரத்தின் நிபுணத்துவத்திற்கு என்னவாயிற்று என்றொரு கேள்வி எழலாம். இந்தக் கேள்வி நியாயமானதே. சில சந்தர்ப்பங்களில் நிபுணத்துவ ஆலோசனைகளையும் ஆதரவையும் எதிர்பார்க்காத, பொருட்படுத்தாத அரசியற் தலைமைகள் ஆட்சியில் அமர்வதுண்டு. அப்படியான இரண்டு ஆளுமைகளே ஜே.ஆரும் மகிந்தவும். இந்த இரண்டு தலைவர்களின் காலத்தில்தான் இலங்கைக்கு வெளியுலக அழுத்தங்கள் அதிகரித்திருந்தன என்பது சிங்கள இராசதந்திரிகளின் அபிப்பிராயமாகும். இதை வர்கள் ஒரு படிப்பினையாகவும் எச்சரிக்கைக்கான முன்னுதாரணமாகவும் கொள்கின்றனர். எனவேதான் சாய்வற்ற, சமனிலையான அரசியல் உறவுகளைக் கொள்ளும் உபாயத்தைக் கொழும்பு விரும்புகிறது.

சிங்கள ஆட்சியாளர்களிடம் பொதுவாகவே ஒரு ஒழுக்க விதியுண்டு. நிபுணத்துவ ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளும் மதிக்கும் அனுசரிக்கும் பண்பியல் ஒழுக்கம் இது. இதனால் அவர்கள் நெருக்கடிகளைக் கடப்பதில் வெற்றியடைந்து வந்திருக்கின்றனர், வந்திருக்கின்றனர். அவர்களுடைய அரசியற் பாரம்பரியம் அத்தகையது. எதிர்ப்புகளைச் சமாளிக்கக்கூடிய, வெற்றிகளைப் பெறக்கூடிய பொறிமுறைகளை நிபுணத்துவ ஆலாசனைகள் எப்போதும் கொண்டிருப்பது வழமை. ஆனால், இதை விளங்கிக் கொள்ளக் கூடிய விரிந்த மனதும் சிறந்த மூளையும் உள்ள தலைமை ஆட்சியில் இருக்கும்போதே

இது வெற்றியடையும். இல்லையென்றால் அகம்பாவத்தின் இருண்ட கண்கள்தான் ஆட்சிநடத்தும். இருண்ட கண்களுக்கு எதுவும் தெளிவாகப் புலப்படாது.

ரணில் மைத்திரி கூட்டரசாங்கம், ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது பல நெருக்கடிகள் அதன் முன்னால் இருந்தன.

1. சீனாவின் முதலீடுகளுக்கு எப்படி இடமளிப்பது? சீன உறவை எப்படித் தொடர்வது?
2. இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவது.
3. யுத்தக் குற்ற விசாரணை.
4. பொருளாதாரச் சீராக்கல் அல்லது பொருளாதார நெருக்கடிகளைத் தணித்தல்
5. சாய்வு நிலைப்பட்ட அரசியல் உறவுகளை சமனிலைப்படுத்துவது
6. உள்நாட்டில் அரச எதிர்ப்புச் சக்திகளைக் கட்டுப்படுத்துவது
7. ஜனநாயக மேம்பாடு அல்லது ஜனநாயக வலுவாக்கம்

இப்படிப் பல தலைப்பிரச்சினைகளோடு கதிரைக்கு வந்த ரணில் மைத்திரிக் கூட்டு இப்பொழுது மெல்ல மெல்லச் சில நெருக்கடிகளைக் கடந்து கொண்டிருக்கிறது. இதில் அவர்கள் வெற்றியடைந்திருப்பது, சமனிலைப்படுத்தப்பட்ட அரசியல் அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியதனாலேயே. இதனால் மேற்கின் ஆதரவையும் சீன முதலீடுகளையும் ஒரு சேரப்பெற்றுக் கொள்ள முடிந்திருக்கிறது. சீன உறவைப் பெற்றுக்கொள்ளும் அதேவேளை மேற்கின் அழுத்தங்களை மென்னிலைப்படுத்திப் புறக்கணிக்க முடிந்திருக்கிறது. இன்னொரு வகையில் சொல்வதாக இருந்தால், இலங்கை மீதான எதிர்ப்பு வளையத்தை நாசுக்காக விலக்கியிருக்கிறது புதிய அரசாங்கம்.

அடுத்த கட்டமாக இந்தச் சமனிலைப் படுத்தப்பட்ட உறவின் மூலமாக பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணவும் முயற்சிக்கின்றனர். ஆனால், அது மிகமிகக் கடினமான ஒருவிடயமாகும்.இன்றைய உலகப் பொருளாதார அமைப்பு முறைக்குஏற்றமாதிரி, தகவமைப்புகளை மேற்கொள்ளாமல், உள்நாட்டுப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை வலுவாக்காமல், வெறுமனே கைகுலுக்கும் அரசியல் உறவுகளின் மூலமாக பொருளாதாரச் சீராக்கலைச் செய்து விடமுடியாது. ஆனாலும் ஆட்சியை ஓட்டுவதற்கான வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவே பொருளாதார ஆறுதற்படுத்தல்களைச் அணுகுமுறை உள்ளது. இது எவ்வளவு காலத்துக்குத் தாக்குப்பிடிக்கும் என்று சொல்ல முடியாது விட்டாலும் தற்போது பிரச்சினையில்லை.

இதனால், யுத்தக்குற்ற விசாரணையை அது ஒதுக்கியே விட்டது. அல்லது மறக்கடிக்கப் பண்ணியிருக்கிறது. கூடவே "எந்தச் சக்தியும் எதிர்ச்சக்தி இல்லை" என்ற கோட்பாட்டின் படி இயங்குவதால், எதிர்ச்சக்திகளைக் கையாள்வற்கான, எதிர்நிலையை எதிர் கொள்வதற்கான சக்தி விரயத்தையும் உள நெருக்கடியையும் தவிர்த்திருக்கிறது. மறுவளத்தில் வெளிநெருக்கீடுகள் இல்லை என்பதால், உள்நாட்டில் அரச எதிர்ப்பு நிலையில் உள்ள சக்திகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலை வளர்ப்பதில் இப்பொழுது கரிசனை கொள்கிறார்கள் ரணிலும் மைத்திரியும். இதன் விளைவுகளை அல்லது இதனுடைய முன்னேற்றத்தை எதிர்வரும் மேதினத்தில் ஓரளவுக்கு உணர முடியும். "மகிந்த அணி" என்று சொல்லப்படும் மாற்று அணியின் பலப்பரீட்சைக்கான களமாக எதிர்வரும் மேதினம் அமையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இன்னும் வலுக்குறையா நிலையைக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஸவுக்கு இந்த மேதினம் ஏறுமுகமா அல்லது இறங்குமுகமா என்று தெரியும். நுகேகொடையில் மகிந்த அணியின் திரட்சியை வைத்து இதை மதிப்பிடலாம்.

இப்படிப் பலவற்றிலும் வெற்றிகரமாகச் செயற்பட்டு வரும் ரணில் மைத்திரிக் கூட்டு, இலங்கையில் ஜனநாயக மேம்பாட்டைச் சிறப்பாக உண்டாக்கியுள்ளதாகவும் பாராட்டைப்பெற்றுள்ளது. பெரும்பாலான நாடுகள் புதிய ஆட்சிக்குச் சார்பாகப் பேசிவருகின்றனர். இதற்கு அவர்கள் காட்டுகின்ற காரணம், ஜனநாயக மேம்பாட்டில் இலங்கை குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதே. ஆனால், நடைமுறையில் இதனுடைய உண்மைகளை நாட்டிலுள்ள மக்களே அறிவர். அதிலும் தமிழ்பேசும் மக்களுக்குத்தான் இது இன்னும் கூர்மையாகத் தெரியும். திரைக்குப் பின்னே மாற்றங்களும் அதிசயங்கள், அற்புதங்கள் எதுவும் நிகழவில்லை என்பதைத் தமிழர்கள் இன்னும் வலுவாக உணர்ந்திருக்கிறார்கள்.



**வெற்றிகரமாகச் செயற்பட்டு வரும் ரணில் மைத்திரிக் கூட்டு, இலங்கையில் ஜனநாயக மேம்பாட்டைச் சிறப்பாக உண்டாக்கியுள்ளதாகவும் பாராட்டைப் பெற்றுள்ளது. பெரும்பாலான நாடுகள் புதிய ஆட்சிக்குச் சார்பாகப் பேசிவருகின்றனர். ஜனநாயக மேம்பாட்டில் இலங்கை குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது**

ஆனால் கொழும்பு தன்னுடைய இலக்கில் வெற்றியடைந்தே செல்கிறது. அது வெளியுலகத்தைத் தன் பக்கம் ஈர்ப்பதிலும் வென்றெடுப்பதிலும் வெளிச்சக்திகளுக்குக் கனிவாக நடப்பதிலும் சிறப்பான அக்கறையோடு செயற்படுகிறது. பதிலாகத் தமிழ் பேசும் மக்களுடைய விவகாரங்களில் அது வழமையான கொழும்புச் சிந்தனையையே கொண்டுள்ளது. புதிய ஆட்சி, நல்லாட்சி, கூட்டாட்சி என்ற உணர்தலுக்குரியமாதிரி தமிழ்பேசும் மக்களுடைய விவகாரங்களைக் கையாளவில்லை. என்பதால்தான் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களிலிருந்து படைவிலகல் நடக்கவில்லை. அரசியற் கைதிகளின் விடுதலை நடைபெறவில்லை. யுத்தக் குற்றங்களுக்கான நீதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை. குறிப்பிடத்தக்க அளவில் நில விடுவிப்பு நிகழவில்லை. யுத்தப் பாதிப்புகளுக்கான நிவாரண நடவடிக்கைகள் புதிய முறையில் ஒழுங்கமைக்கப்படவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வைக் குறித்த முன்னாயத் தங்கள் கூட நம்பிக்கையளிக்கும் வகையில் ஆரம்பிக்கப்படவில்லை. காணாமற்போனோர் தொடர்பாக புதிய சேதிகள் வழங்கப் படவில்லை.

மொத்தத்தில், மகிந்த அராசாங்கத்தும் மைத்திரி ரணில் அரசாங்கத்துக்குமிடையில் நம்பிக்கை அளிக்கும் வகையிலான வேறுபாடுகளை உணரமுடியாமல் உள்ளது என்று தமிழ் மக்கள் சொல்லும் அளவுக்கே நிலைமைகள் உள்ளன. உளரீதியான ஒருவகை விடுபடுதலைத்தவிர, பௌதீக ரீதியான மாற்றங்கள் எதையும் உணர முடியவில்லை. எனவேதான் மோதகமும் கொழுக்கட்டையும் கதையைப் பற்றி பல சந்தர்ப்பங்களிலும் சமகால அரசியலில் பலரும் இணைக்கிறார்கள்.

அப்படியென்றால், கொழும்பு சர்வதேசத்துக்கு இனிப்பாகவும் தமிழ் பேசும் மக்களுக்குக் கசப்பாகவும்தான் தொடர்ந்தும் இருக்கப்போகிறதா? என்றால், தமிழர் அரசியலின் தமிழ் பேசும் மக்களுடைய எதிர் காலத்தின் நிலை என்னவாகப்போகிறது?



மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'சித்திரை விளையாட்டுபோட்டிகள்' கடந்த வாரம் நடந்தது.








1-ம் பக்க தொடர்ச்சி

# முன்னாள் போராளிகள் கைது

## பின்னணியில் மகிந்த?



என்னடி மீனாட்சி சொன்னது என்னாச்சு என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. வடக்கில் நடப்பவற்றை பார்க்க இதை தவிர வேறுவிதமாக கேட்கத் தோன்றவில்லை. நல்லாட்சி, இனநல்லுறவு, சந்தேகம் களைதல் என சோடிக்கப்பட்ட வார்த்தைகளின் பின்னாலிருந்த கடுமையான முகம் வெளிப்படுகிறதா என்ற கேள்விதான் எழுகிறது.


முன்னர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தின் இறுதிப்பகுதியில் விடுதலைப் புலிகள் மீளிணைகிறார்கள் என கூறப்பட்ட கதையுடன் வடக்கு அல்லோலகல்லோலப் படுத்தப்பட்டது. சுற்றிவளைப்புக்கள், வீதிச் சோதனைகள் நடந்தன. முன்னாள் போராளிகள் பரவலாக கைது செய்யப் பட்டனர். மற்றவர்கள் விசாரிக்கப்பட்டனர். கண்காணிக்கப்பட்டனர். மொத்தத்தில் அப்பொழுது ஒரு போர்க்கால நிலைமையை வடக்கு உணர்ந்தது.

மகிந்த ராஜபக்சவை வீட்டுக்கனுப்பி விட்டு, இனியாவது நிம்மதியாக இருக்கலாமென பெருமூச்சு விட, மீண்டும் அதே நிலைமை உருவாகியிருக்கிறது.

சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கியுடன் வில்லங்கங்கள் ஆரம்பமாகியுள்ளன. சாவகச்சேரி சம்பவத்துடன் தொடர்புடையவர்களென்ற சந்தேகத்தில் இதுவரை எத்தனைபேர் கைதாகியுள்ளனர் என்பதை யாரும் இதுவரை உறுதியாக அறிவிக்கவில்லை. மனிதஉரிமைகள் சட்டத்தரணிகளின் தகவல்ப்படி பதினொரு பேர் வரை கைதாகியுள்ளனர். அவர்களில் பெண்ணொருவரும் உள்ளடக்கம்.

சாவகச்சேரி சம்பவம் தென்னிலங்கையில் ஒரு புயலை கிளப்பியது உண்மை. மகிந்த அணி அதனை தமது இனவாத பிரச்சாரங்களிற்காக கையிலெடுத்தது. மகிந்த ஆதரவு அணியின் அரசியல் அடித்தளம் இனவாதத்தால் கட்டியெழுப்பப்பட்டது. தற்போது இனங்களிற்கிடையிலான பதற்றம் இல்லை. அப்படியிருந்தால்த்தான் மகிந்த அணியால் அரசியல் செய்ய முடியும். மெல்லுவதற்கு அவல் இல்லாமல் மகிந்த அணி திண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில்த்தான் சாவகச்சேரி சம்பவம் நடந்தது.

சாவகச்சேரி சம்பவத்தை தொடர்ந்து வடக்குகிழக்கில்பரவலானகைதுகள் ஆரம்பித்துள்ளன. பெரும்பாலான கைதுகள் கடத்தல் பாணியிலான கைதுகள். விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து புனர்வாழ்வின் பின்னர் விடுதலையானவர்களின் வீட்டிற்கு வருபவர்கள் அவர்களை கடத்திச் செல்கிறார்கள். இரண்டொருநாளின் பின்னர்



> **விடுதலைப்புலிகள் மீள பலமடைகிறார்கள். தனிநாட்டு கோரிக்கை பலமடைகிறது என்பதுதானே மகிந்த அன்ட் கோவின் பிரமாஸ்திரம். அவர்களை அடக்க எனக்கு மட்டும்தான் வல்லமையுள்ளது என்ற ஒரே அஸ்திரம்தான் அவரிடமுண்டு. அதனை முறியடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் இந்த கைதுகள்**

பொலிசார் “அது கடத்தலில்லை, கைது“ என அறிக்கைவிடும் வரை நடந்தது என்னவென்பதில் குழப்பம் நிலவுகிறது.

அண்மைய கைதுகளில் கவனிக்கத்தக்க அம்சம் ஒன்றுள்ளது. விடுதலைப்புலிகளின் அறியப்பட்ட தளபதிகள்தான் கைதாகிறார்கள். அந்த அமைப்பின் எஞ்சியிருக்கும் இராணுவரீதியில் முதன்மை வாய்ந்த தளபதிகள் கைதாகிறார்கள். கிழக்கு தளபதியாக இருந்த ராம் திருக்கோவிலிலிருந்த அவரது வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார். அவர் கடத்தப்பட்டதாக மனைவி பொலிசாரிடம் முறையிட்ட பின்னரே, அது கைது என்றனர் பொலிசார். அதுபோல யாழ்ப்பாணம் நீர்வேலியில் வசித்து வந்த சாள்ஸ் அன்ரனி படையணியின் முன்னாள் தளபதி நகுலனும் இதேபாணியில் கைது செய்யப்பட்டுள்ளார். அடுத்ததாக புலிகளின் முன்னாள் பிரமுகர்களில் ஒருவரான கலையரசனும் கைதாகியுள்ளார். வடமராட்சி கிழக்கில் அதே கடத்தல் பாணியில் இருவர் கைதாகியிருந்தனர்.

இதில் கவனிக்கத்தக்க விடயம் என்னவென்றால் ராம் மற்றும் நகுலன் ஆகியோர் யுத்தம் நிறைவடைந்த தருணத்தில் கிழக்கு காடுகளில் சிறிய படையணியுடன் நிலைகொண்டிருந்தவர்கள். அதன் பின்னர் அவர்கள் பற்றிய உத்தியோகபற்றற்ற தகவல்கள் எதுவும் வெளிவராத நிலையில், கடந்த சில வருடங்களின் பின்னர் திடீரென விடுதலையானார்கள். இடையில் அவர்கள் பற்றிய பல்வேறு ஊகங்கள் உலாவினாலும் அவை உறுதிப்படுத்ததக்கவையல்ல.

நகுலனின் கைதின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த அவரது தாயார் சொன்ன விடயமொன்று கவனிக்கத்தக்கது. கைது செய்யப்பட்ட பின்னர் நகுலனை முதன்முதலாக பார்ப்பதற்காக மட்டக்களப்பிற்கு சென்ற சமயத்தில் அவருக்கு திருமணமொன்றை செய்து வைத்தால் விடுதலை செய்வதாக இராணுவம் கூறியதாக. அதன் பின்னர் அவருக்கு திருமணம் செய்வித்து சிறைமீட்டனர் பெற்றோர். அதன் பின்னர் விவசாயம் செய்து வந்தார்.

ராமின் கைதின் பின்னர் பாதுகாப்பு தரப்பிலிருந்து ஒரு கருத்து கிளம்பியிருந்தது. கிழக்கில் கொல்லப்பட்ட 600 பொலிசார் பற்றியும் விசாரிக்க வேண்டியிருப்பதாக. அப்படியெனில் ராம் தடுத்து வைக்கப் பட்டிருந்த காலத்தில் மிக முக்கியமான அந்த சம்பவம் பற்றி விசாரிக்கவில்லையா என்ற முக்கிய கேள்வியும் எழும்.

அப்படியென்றால் இந்த தொடர் கைதுகளின் பின்னணி என்ன?

பாதுகாப்பு செயலாளர் கூறுகிறார், தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான நிலை இல்லை. ஆனால் விசாரணைகளை முன்னெடுக்கும் புலனாய்வு பிரிவினர் கைதுகளை செய்கிறார்கள் என. இதுதான் சிந்திக்க வேண்டிய இடம்.

சமூகவலைத்தளங்களில் பேசப்படும் ஒரு கருத்தை இந்த இடத்தில் இணைத்து பார்க்கலாம். அண்மைக்காலமாக மகிந்த ராஜபக்ச அணி 'இனவாதம், மதவாதம் பேசி சடுதியான அதிர்வுகளை சாதாரண மக்கள் மத்தியில் ஏற்படுத்தி அச்சுறுத்தும் சக்தியாக உருமாறியுள்ளனர். மேதினத்தை தனியாக நடத்தி தமது சுதந்திரக்கட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த மகிந்த அணி முயற்சித்த சூழல் சுதந்திரக்கட்சிக்காரர்களிற்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியது.

விடுதலைப்புலிகள் மீள பலமடைகிறார்கள். தனிநாட்டு கோரிக்கை பலமடைகிறது என்பதுதானே மகிந்த அன்ட் கோவின் பிரமாஸ்திரம். அவர்களை அடக்க எனக்கு மட்டும்தான் வல்லமையுள்ளது என்ற ஒரே அஸ்திரம்தான் அவரிடமுண்டு. அதனை முறியடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் இந்த கைதுகள் என்பது அங்கு அலசப்படும் ஒரு கருத்து.

பார்த்து பார்த்து விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் கைது செய்யப்படுவதன் இரகசியம் என்ன? அந்தகைதுகள் செய்தியாக தென்னிலங்கைக்கும் செல்ல வேண்டுமென்ற எதிர்பார்ப்புக்கள் இல்லையென கொள்ளலாமா?

எதுஎப்படியோ இந்த அரசியல் சதுரங்கத்தில் சிக்கி சின்னாபின்னமாவது முன்னாள் போராளிகள்தான். யுத்தத்தின் முடிவில் இயல்பான வாழ்க்கைக்கு திரும்பியுள்ள அவர்களை பாதுகாக்கும் கடமை எல்லோருக்கும் உள்ளது. அரசியல் சித்து விளையாட்டுக்களில் அவர்கள் பலிக்கடாவாக்கப்படக்கூடாது. சிங்களதரப்பிற்கு மட்டுமல்ல, தமிழ் தரப்பிற்கும் இது பொருத்தமானது.

ஹிருத்திக் போஸ் நிஹாலே

தீபம்
வார இதழ்
விளம்பர தொடர்புக்கு
sales@deepam.lk ☎ 0768255567





மக்கள் குரல்

# சீரழிந்துபோகும் சின்னப்புதுக்குளம் சந்தைதொகுதி

கடந்த ஆண்டு வடக்குமாகாண முதலமைச்சர் வவுனியா மாவட்டத்திற்கு விஜயம் செய்த பொது சின்னப் புதுக்குளப் பகுதியில் நவீன சந்தை கட்டிடத் தொகுதியொன்று திறந்து வைக்கப்பட்டது. இங்கு 11 கடைகள் உள்ளன. உள்புறத்தில் மீன் மற்றும் இறைச்சி கடைகளுடன் மரக்கறிச் சந்தையும் அமைந்துள்ளது. புடைவைக்கடை, தையல்கடை, பலசரக்கு என பல்வேறு நிலையங்களும் உள்ளன. இந்தப்பகுதியில் மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். அதனால் ஆரம்பத்தில் வர்த்தகம் அதிகமாக இருந்தது. எனினும், தற்போது வியாபார நடவடிக்கைகள் குறைவடைவதாக வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோர் குறிப்பிடுகின்றனர்.

மக்கள் அதிகமிருந்தும் ஏன் வியாபாரம் குறைவடைந்துள்ளது? காரணத்தை தேடி அங்கு சென்றபோது மக்களும் வர்த்தகர்களும் பல்வேறு குறைகளை சொன்னார்கள்.

நவீன முறைப்படி வடிவமைக்கப்பட்டு இந்த சந்தைத் தொகுதி கட்டப்பட்டாலும் சில குறைபாடுகளும் உள்ளன. கட்டட தொகுதிக்கு அருகில் வடிகால் அமைப்பதற்கென வெட்டப்பட்ட குழி அப்படியே உள்ளது. இதனால் மோட்டார்சைக்கிள் மற்றும் வாகனத்தில் வருபவர்கள் அவற்றை நிறுத்தி வைக்க சிரமப்படுகிறார்கள்.

சந்தைத்தொகுதிப்பகுதியில் பணிபுரியும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் என இரண்டு மலசலகூடங்கள் அமைக்கப்பட்ட போதும் பெண்களுக்கான மலசலகூடம் மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது. ஆண்கள் பாவிக்கும் மலசலகூடம் நுழையவே முடியாத நிலையில் உள்ளது. தாங்கள் பல அசௌகரியங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. என பெண் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக நகரசபைக்கு தெரிவிக்கப் பட்ட போதும் அதற்கான தீர்வு இன்னும் கிட்டவில்லையே என பெண் ஊழியர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர். இதனை விட மீன் மற்றும் இறைச்சிக் கடை கழிவுகள் உரிய நாட்களில் நகரசபையின் சுத்திகரிப்பு பிரிவினரால் வெளியேற்றப்படுவதில்லை. இதனால் பெரும் துர்நாற்றம் ஏற்படுகின்றது. நுகர்வோரின் வரவை மட்டுப்படுத்துவதில் துர்நாற்றமும் முக்கிய பங்குவகிப்பதாக வர்த்தகர்கள் சொல்கிறார்கள்.

அந்தப்பகுதி மக்களின் நன்மைக்காக உருவாக்கப்பட்ட இந்த சந்தைத் தொகுதியை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு வவுனியா நகரசபைக்கு உரித்தானது அல்லவா?











# வவுனியா பொருளாதார மத்தியநிலையம் எப்பொழுது முடியும் இழுபறி?

1-ம் பக்க தொடர்ச்சி

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிப்பீடமேறிய பின்னர் கொண்டு வரப்பட்ட இவ்வாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வவுனியாவில் 2000 மில்லியன் ரூபாய் செலவில் நவீன வசதிகள் கொண்ட பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இது அதிக விவசாயிகளைக் கொண்ட வன்னிப் பகுதிக்கு ஒரு வரப்பிரசாதமாகும். வவுனியாவின் எந்தப் பகுதியில் பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பது என்பதில் கடந்த சில மாதங்களாக இழுபறி நிலை தொடர்வதால் இந்த நிதி திரும்பிச் செல்லும் அபாயம் கூட உள்ளதாக மக்கள் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். கூட்டமைப்பு உறுப்பினர்களிற்குள்ளும் இந்த விடயத்தில் வேறுபட்ட அபிப்பிராயங்கள் உள்ளன. பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு தாண்டிக்குளம், ஓமந்தை, ஈரப்பெரியகுளம், சாளம்பைக்குளம் என பல இடங்கள் குறித்து பேசப்படும் நிலையில் அவ் இடங்களின் சாதக பாதகம் தொடர்பில் ஆராய்வதே இப் பத்தியின் நோக்கம்.

கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அமைச்சர் றிசாட் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வடக்கு முதலமைச்சர் சார்பாக வடமாகாண கல்வி அமைச்சர் க.குருகுலராஜா ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இப் பொருளாதார மத்திய நிலையத்திற்கான இடம் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன் போது தாண்டிக்குளம், ஓமந்தை தொடர்பில் ஆராயப்பட்டு முடிவு எட்டப்படாத நிலையில், அதன்பின்னர் பொருத்தமான இடம் தெரிவு செய்தல் தொடர்பில் அரச அதிபர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் ஹரிசன் பொருளாதார மத்திய நிலையம் நகரில் இருந்து 2 3 கிலோமீற்றர் தூரத்தில் அமைக்கப்பட வேண்டும் எனவும் அற்கான இடத்தை தெரிவு செய்து வழங்குமாறும் கோரியிருந்தார். இதனால் கூட்டமைப்பின் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட ஓமந்தை மாணிக்கவளவு காணியை வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

**விவசாய பண்ணை காணி வடமாகாண விவசாய அமைச்சின் கீழ் உள்ளது. இக்காணியை வழங்க முடியாது என வடமாகாண விவசாய அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் தெரிவித்திருந்ததுடன், ஓமந்தையை தெரிவு செய்யுமாறும் முதலமைச்சர் கடிதம் மூலம் அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தியிருந்தார்.**

அது நகரில் இருந்து 9 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருந்தது.

### ஏற்பட்ட முரண்பாடு

இந்நிலையில் இத்திட்டத்தை பொருத்தமான காணி வழங்கப்படாவிட்டால் கைவிட்டு வேறு மாவட்டத்திற்கு மாற்றப் போவதாக கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு தெரிவித்ததாக கூறப்பட்டது. இதனையடுத்து கூட்டமைப்பின் வவுனியா மக்கள் பிரதிநிதிகளுக்குள் கருத்து முரண்பாடுகள் எழத்தொடங்கின. திட்டத்தை திரும்பிச் செல்ல விட முடியாது என வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோர் தாண்டிக்குளம் விவசாய பண்ணை காணியை வழங்கலாம் என முடிவு எடுத்திருந்தனர். இதனை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராசா, ம.தியாகராசா ஆகியோர் எதிர்த்திருந்ததுடன் ஓமந்தை, மாணிக்கவளவு காணியே பொருத்தமானது எனவும் இது தொடர்பில் வடமாகாண முதலமைச்சருடன் பேசி தீர்வு எட்ட வேண்டும் எனவும் வலியுறுத்தி வந்தனர். இந்த விடயத்தில் வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் கருத்து பெற பலதடவை முயன்றும் பதில் கிடைக்கவில்லை.

இந்த முரண்பாடுகளால் நிலைமை பூதாகாரமாகி திட்டம் வேறு மாவட்டத்திற்கு செல்லும் அபாய நிலை ஏற்பட்டது.

### முதலமைச்சரின் மறுப்பு

தாண்டிக்குளம் விவசாய பண்ணை காணி வடமாகாண விவசாய அமைச்சின் கீழ் உள்ளது. இக்காணியை வழங்க முடியாது என வடமாகாண விவசாய அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் தெரிவித்திருந்ததுடன், ஓமந்தையை தெரிவு செய்யுமாறும் முதலமைச்சர் கடிதம் மூலம் அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தியிருந்தார். ஒரு சாரார் இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்தி முதலமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் இந்த திட்டத்தை குழப்புவதாக பிரச்சாரமும் செய்ய முற்பட்டனர்.

### குழு அமைத்தல்

இந்நிலையிலேயே பொருத்தமான காணியை தெரிவு செய்யுமாறு மாவட்ட அரச அதிபர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட சுயாதீன குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதில் சி.சிவகுமார் (விவசாய பணிப்பாளர், வடமாகாணம்), ஏ.ஜி.கே. குணதிலக (பணிப்பாளர், நகர அபிவிருத்தி அதிகார சபை, வடக்கு), யோகேஸ்வரன் ( பிரதி விவசாய பணிப்பாளர் விரிவாக்கம், வவுனியா), கா.உதயராசா (பிரதேச செயலாளர், வவுனியா), ம.கிருபாசுதன் (திட்டமிடல் பணிப்பாளர், வவுனியா), திருமதி எல்.பி.ஈஸ்வரன் (விவசாய பணிப்பாளர், வவுனியா) ஆகியோர் அங்கத்துவம் வகித்தனர். இவர்கள் ஓமந்தை மற்றும் தாண்டிக்குளம் தொடர்பில் ஆய்வு செய்து அறிக்கை ஒன்றையும் தாக்கல் செய்தனர்.

### தாண்டிக்குளம் விவசாய பண்ணைக் காணி

இக் காணியானது 140 ஏக்கரைக் கொண்டது. 1948 ஆம் ஆண்டு விதை உற்பத்திப் பண்ணைக்காக பொது மக்களிடம் இருந்து பெறப்பட்டு தற்போது வடமாகாண சபையின் கீழ் காணி உரிமம் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் மத்திய அரசின் கீழ் காணப்பட்ட போதும் 1989 ஆம் ஆண்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் கீழ் கொண்டு வரப்பட்டு தற்போது வடமாகாண சபைக்குரியதாகவுள்ளது. காணி உரிமம் பெயரளவில் வடமாகாண விவசாய அமைச்சுக்குரியதாக இருந்தாலும் காணிப்பத்திரம் இன்னும் மாற்றிக் கொடுக்கவில்லை என பிரதேச செயலக பதிவுகள் காட்டுகின்றது. ஏ9 வீதியில் நகரில் இருந்து 1 2 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இக் காணியில் 35 ஏக்கர் 1989 ஆம் ஆண்டு விவசயாக் கல்லூரிக்கு வழக்கப்பட்டது. இக் கல்லூரியே வடமாகாணத்தில் உள்ள ஒரே ஒரு விவசயாக் கல்லூரி என்பதுடன் இதனை இன்னும் விஸ்தரிக்க வேண்டிய தேவையும் உள்ளது. இப்பகுதியில் அமையப் பெற்ற பண்ணையானது வடமாகாணத்திற்கு தேவையான விதை உற்பத்திப் பொருட்களின் ஒரு பகுதியை பூர்த்தி செய்வதுடன், விவசாய கல்லூரி மாணவர்களுக்கு தேவையான கற்றல் வசதிகளையும் வழங்குகின்றது. இங்கு பழமரக் கன்றுகளுக்கான தாய்தாவர பராமரிப்பும் இடம்பெறுகிறது. இரு போகத்திலும் பயிர்ச்செய்கை இப்பண்ணையில் மேற்கொள்ளப்படுவதால் நிலத்தடி நீர்மட்டம் பேணப்படுவதுடன் இப்பண்ணைக் காணிக்கு அருகில் உள்ள கிணறுகளில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 200 குடிமனைக்கு குடிநீர் விநியோகிக்ப்படுகின்றது.

### ஓமந்தையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணி

ஏ9 வீதிக்கு அருகாமையில் கள்ளிக்குளம் வீதியில் உள்ள மாணிக்கவளவு பகுதியில் அமைந்துள்ளது. இது 5ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்டது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் எல்லைக்குட்பட்ட இக் காணி நகரில் இருந்து 9 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. சாதாரண வேகத்தில் செல்லும் போது நகரில் இருந்து 15 நிமிடத்தில் இங்கு செல்ல முடியும். இக் காணி தனியாருக்கு சொந்தமானது. ஆனாலும் மத்திய தர வகுப்புக் காணியாகிய இக்காணியை இது வரை எவரும் உரிமை கோரவில்லை. இக் காணி பொருளாதார மத்திய நிலையம் அமைக்க பயன்படுத்துவதாக இருந்தால் பிரிவு 38ஏ காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் இதனை சுவீகரிக்க முடியும்.

### தாண்டிக்குளம் விவசாயக் காணியின் அனுகூலம்

இக்காணி நகரத்திற்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ளதுடன், ஏ9 வீதியோரமாகவும்

உள்ளது. பொருட்களை விற்பனை செய்வோருக்கும் வாங்குவோருக்கும் வசதியான இடம். புகையிரதம், பேரூந்து என இரு வழிப்போக்குவரத்து வசதிகள் காணப்படுவதுடன் பணபரிமாற்ற நடவடிக்கைகளுக்கான வங்கி வசதிகள் கூட அருகிலேயே அமைந்துள்ளன. மன்னார் வவுனியா, யாழ்ப்பாணம் வவுனியா, ஹொரவப்பொத்தானை வவுனியா உள்ளிட்ட வீதிகளை இணைக்கும் சந்திக்கு அண்மையில் உள்ளது.

**ஓமந்தை காணியின் அனுகூலங்கள்**

ஏ9 வீதியில் அமைந்துள்ள இக் காணி சமதரையாகவுள்ளது. இக்காணியை இலகுவாக சுவீகரிக்க முடியும். எதிர்காலத்தில் மேலும் தேவையின் பொருட்டு விஸ்தரிக்க முடியும். பொருளாதார மையத்திற்கு தேவையான தொழிலாளர்களை அருகில் உள்ள கிராமங்களில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, பூநகரி மற்றும் பாலமோட்டை ஊடாக மன்னார் மாவட்டத்தை இணைக்கும் போக்குவரத்து வசதிகள் உள்ளது. இப்பகுதி புதிய நகரம் அல்லது உபநகரம் உருவாகுவதற்கு ஏதுவாக அமைவதுடன், புகையிரதம், தரை வழி என இரு வழிப் போக்குவரத்து வசதிகள் காணப்படுகின்றது. உள்ளூர் அதிகார சபையின் வருமானம்

பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படும் போது வங்கிக் கிளைகள் புதிதாக அமைக்கப்படவாய்ப்புள்ளது. ஏனைய வர்த்தக நடவடிக்கைகளுக்கு 9 கிலோமீற்றர் தூரத்திற்கு நகருக்கே பயணிக்க வேண்டியுள்ளது.

**ஆய்வுக்குழுவினர் பரிந்துரை**

தற்போதைய அரசாங்கம் நாடு பூராகவும் பொருளாதார அபிவிருத்திக்காக 45 பொருளாதார அபிவிருத்தி மையங்களை அமைக்கின்றது. அந்த வகையில் கைத்தொழில் மற்றும் தொழில் நுட்ப அபிவிருத்திக்காக அடையாளம் காணப்பட்ட சிறப்பு வலயங்களில் வடமாகாணத்தின் யாழ்ப்பாணத்தின் தகவல்கள் விவசாய தொழில்நுட்ப மற்றும் வேறு கைத் தொழில் வலயமும், கிளிநொச்சி, வன்னியில் இரண்டு உற்பத்தி கைத்தொழில் வயலயமும் அமைய இருக்கின்றது. வவுனியாவில் பிரத்தியேக பொருளாதார மத்திய நிலையம் அமைய இருக்கின்றது. இந்த அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்ட வவுனியா நகரப்பகுதிக்கான அபிவிருத்திட்டம் 2009 2030 என்ற முன்மொழிவு அறிக்கையில் பிரத்தியேக பொருளாதார மையம் ஓமந்தைக்கு அண்மையில் மாற்றப்பட்டு தற்போதைய நகர

பரிசீலிக்கப்பட்டுள்ளது.

**அரச அதிபரின் பரிந்துரை**

மிக குறுகிய காலத்தில் சாதகமான காணி ற்றிய பதிலொன்றை கிராமிய பொருளாதார அமைச்சுக்கு அனுப்பாத பட்சத்தில் இவ் விசேட பொருளாதார மையம் வேறு மாவட்டத்திற்கு மாற்றப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளது என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோகண புஸ்பகுமார மாவட்ட அபிவிருத்திகுழுவின் இணைத் தலைவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்திற்கான காணி அடையாளப்படுத்துவதில் இழுபறி நிலை ஏற்பட்டு வரும் நிலையிலேயே அரசாங்க அதிபர் இக்கடிதத்தை வவுனியா மாவட்ட அபிவிருத்திகுழுவின் இணைத்தலைவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஓமந்தை மாணிக்கவளவு காணி நகரில் இருந்து 9 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதுடன் 13 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள காணியாகும். இக்காணி 1966 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியான வில்லியம் கோபல்லாவால் தனியார் ஒருவருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இக்காணியில் 2 ஏக்கர் காணியானது ஏற்கனவே 4 பயனாளிகளுக்கு அரை ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

பம்பைமடு அரசகாணி வவுனியா நகரத்தில் இருந்து மன்னார் வீதி வழியாக 8 கிலோமீற்றர் தூரத்தில் பம்பைமடுவில் இருந்து செக்கடிப்புலவு செல்லும் வீதிக்கு அடுத்ததாக பிரதான வீதிப்பக்கமாக 5 ஏக்கர் அரச காணி அமைந்துள்ளது. இக் காணி வனவளத்திணைக்களத்திற்கு சொந்தமானது. இக்காணியை விடுவிப்பதற்கு காலஅவகாசம் தேவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஈரப்பெரியகுளம் அரச காணியானது நகரத்தில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் ஏ9 வீதியில் முன்பு பொதிகள் சோதனை செய்யும் சாவடிக்கு அண்மித்ததாக சுமார் 15 ஏக்கர் காணி அமைந்துள்ளது. இக் காணியில் விசேட பொருளாதார அமையம் ஒன்றினை அமைப்பதற்கு 5 ஏக்கர் காணியை விடுவிக்கலாம் என வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்குறிப்பிட்ட காணிகளில் தாண்டிக்குளம் பண்ணைக்காணியும் ஈரப் பெரியகுளத்தில் அமைந்துள்ள 5 ஏக்கர் காணியுமே உடனடியாக விடுவிக்க கூடிய நிலையில் உள்ளது. இந் நிலையில் மிக குறுகிய காலத்தில் சாதகமான காணி பற்றிய


தாண்டிக்குளம் விவசாய பண்ணை


ஓமந்தையில் முன்மொழியப்பட்ட இடம்

அதிகரிக்க வாய்ப்புள்ளதுடன் பொருளாதார வலயக்கழிவுகளை அகற்றுவதற்கு போதுமான இடவசதியும் காணப்படுகின்றது. மழை காலங்களில் நீர் தேங்கி நிற்காதவாறு வழிந்தோடக்கூடிய மேட்டு நிலமாக அமைந்துள்ளதுடன் மக்கள் செறிவு அற்ற பிரதேசமாகையால் தொற்று நோய்கள் பரவுவதற்கான வாய்ப்புக்களும் குறைவாகவுள்ளது.

**தாண்டிக்குளம் விவசாயப் பண்ணைக் காணியின் பிரதிகூலங்கள்**

ஏற்கனவே சனச் செறிவு மிக்கதாக காணப்படும் வவுனியா நகரின் பசுமை நிலை பாதிப்படையும். எதிர்கால தேவை கருதி பொருளாதார மத்திய நிலையத்தை விஸ்தரிக்க முடியாத நிலை ஏற்படுவதுடன், நிலத்தடி நீர் மாசடையக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளது. சனத்தொகை கூடிய பகுதியாக உள்ளத்தால் டெங்கு போன்ற தொற்று நோய்கள் இலகுவாக பரவக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதுடன், பொருளாதார வலயக் கழிவுகளை அகற்றுவதில் சிக்கல்கள் ஏற்படும். பண்ணைக் காணி, வயல்களணி, விவசாயக் கல்லூரி காணி என்பவற்றில் உள்ள பயிர்களுக்கு விரைவாக நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதுடன், நகருக்கான குடிநீர் விநியோகக் கிணறுகளும் மாசடையும் அபாயமுள்ளது. சமூக சீர்கேடுகளுக்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதுடன் புகையிரத பாதையை அண்டி வாழும் மக்கள், மற்றும் அயலில் உள்ள குடியிருப்புக்களில் பாதிப்புக்கள் ஏற்படும். ஏ9 வீதியில் கூட வாகன நெரிசல் ஏற்பட வாய்ப்புள்ளது.

**ஓமந்தைக் காணியின் பிரதிகூலங்கள்**

நகரில் இருந்து தொலைவில் இது அமைந்துள்ளதுடன், வங்கிகள் மற்றும் நிதி நிறுவன வசதிகள் தற்போது இல்லை. எனினும் மொத்த வியாபார கிளையும் அவ்விடத்திற்கு மாற்றுவதாக முன்மொழியப்பட்டுள்ளது.

வடமத்திய மகாணத்திற்கான பொருளாதார மத்திய நிலையம் அதன் புறநகரான தப்புத்தேக்கமவிலும், மத்திய மாகாணத்திற்கான பொருளாதார மத்திய நிலையம் அதன் புறநகரான தம்புள்ளையிலும் இடவசதியையும் வேறு இன்னொரன்ன அனுகூலங்களினை அடிப்படையாக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் வவுனியாவிற்கான பொருளாதார மத்திய நிலையத்தையும் புறநகரப் பகதியில் அமைப்பது சிறந்தது.

வடக்கில் உற்பத்தி செய்கின்ற பொருட்களில் உள்ளூர் தேவைகள் தவிர எஞ்சியவற்றை தென்பகுதி நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு ஏற்றுமதி பொருட்களை நவீன களஞ்சியவசதிகளுடன் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யவும், வடபகுதி நுகர்வோருக்கு தேவையான தென் பகுதி உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் ஓமந்தை பிரதேசம் சிறந்ததாக காணப்படுகின்றது. எனவே, வன்னி மக்களின் மனங்களில் நல்லாட்சி அரசின் அனுகூலங்கள் கிடைக்க அவர்கள் மனங்களில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்த அமையப் பெறுகின்ற பொருளாதார மையம் ஓமந்மையில் அமைவதே சிறப்பானது என சிபார்சு செய்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஓமந்தை, தாண்டிக்குளம் தவிர சாளம்பைக்குளம், ஈரப்பெரியகுளம் (முன்னர் சோதனைச் சாவடி காணப்பட்ட இடம்) என்பனவும் இதனை அமைப்பதற்காக மாவட்ட அரச அதிப் எம்.வி.ரோஹண புஸ்பகுமார அவர்களால் காணியை மீள சுவீகரிப்பதற்கு காலஅவகாசம் குறுகியதொன்றல்ல. அத்துடன் நஸ்ட ஈட்டையும் காணி உரிமையாளருக்கு வழங்க வேண்டும்.

சாளம்பைக்குளம் அரச காணி வனவளத் திணைக்களத்தினால் வீடமைப்புதிட்டத்திற்கென விடுவிக்கப்பட்ட 200 ஏக்கர் காணியில் 3 ஏக்கர் காணியை மேற்படி விசேட பொருளாதார மையம் அமைப்பதற்கு விடுவிக்கமுடியும் என அமைச்சர் ரிசாட் பதியுர்தீன் தெரிவித்திருந்தார். இக்காணியானது நகரத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. பதிலொன்றை கிராமிய பொருளாதார அமைச்சுக்கு அனுப்பாத பட்சத்தில் இவ் விசேட பொருளாதார மையம் வேறு மாவட்டத்திற்கு மாற்றப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்விடயம் தொடர்பில் உண்மையில் விவசாயிகள், உற்பத்தியாளர்கள் ஆகியோரின் நலன்களை முன்னிறுத்தி பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்கான இடத்தினை தெரிவு செய்ய அனைவரும் ஒன்று பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

வ.நரேஜி






அம்மா கதவடியில் வந்து பார்த்தார். பார்வை என்னமோ சாதாரணமாகத்தானிருந்தது. 'உனது பெரிய வயிறு ஒருநாளில்லை ஒருநாள் உன்னை கடுமையான சிக்கலில் கொண்டு போய் விடப்போகிறது' எனச் சொல்லிக் கொண்டே சிந்திப்போன பாலிற்காக எதுவுமே சொல்லாது வீட்டினுள் சென்றார். காலில் கொப்புளம் வந்து தோல் உரிந்து விடாதிருக்க மரத்திலிருந்து இரு இலைகளைப் பறித்து எனது காலில் வைத்து எனது சட்டையில்கிழித்தெடுத்ததுணியினால் கட்டிக் கொண்டேன். அழுதுகொண்டே இதைச் செய்து முடித்த நான் என்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு மரத்தின் கீழ் ஆடு மாடுகளுடன் அமர்ந்துகொண்டேன்.

எனது காயமும் வேதனையும் அம்மாவை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. வேலை செய்வதற்குத் தகுதியானவளாகவே அவர் என்னைப் பார்த்தார். மூன்று நாட்களின் பின்பு அம்மா என்னை மேய்ச்சல் நிலத்தின் தொங்கலுக்குச் சென்று மாட்டுக்கன்றுகளைப் பார்த்து வரும்படி சொன்னார். மாட்டுக் கன்றுகளைத் தேடிப் புறப்பட்ட நான், எனது காலில் கட்டியிருந்த துணிக்கட்டின் மேல் வெள்ளை வெள்ளையாக எதோ தொங்குவதைப் பார்தேன்.

முதலில் துணியின் நூல்கள் தான் தொங்குவதாக நினத்த நான் அவற்றைத் தொடும் போது அவை புழுக்கள் என்பதைக் கண்டு கொண்டேன். பெரிதாக அலறிக்கொண்டேவீட்டைநோக்கிஓடினேன். எனது கால் அழுகிப் போய்விட்டதென்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இருக்கவில்லை. அம்மா புண்ணிலிருந்து புழுக்களை அகற்ற உதவினார். புண் மீது பஞ்சு வைத்துக் கட்டி விட்டார். ஆனாலும் எனது பயம் என்னை விட்டுப் போகவே இல்லை. காலை இழந்து விடுவேனென்ற பயத்தில் அடிக்கடி என் காலைப் பார்த்துக்கொண்டே இருப்பேன். நல்ல வேளையாகக் கால் சீக்கிரமாகவே குணமாகியது, எனது மனப்பாரமும் என்னைவிட்டு நீங்கியது.

என்னைத் தண்டிப்பதற்காகவே அம்மா ஆடுகளை மேய்க்கும்படி கட்டளையிடும் போது அவளென்னை எவ்வளவு மகிழ்விக்கின்றாள் என்பதை அவள் அறியவேயில்லை. காலைதொடங்கிமாலைவரை என்பிரியமான ஆடுகளைப் மேய்ப்பது, அப்போது அடிகள், உதைகள், ஏச்சுக்களிலிருந்து விடுதலை எல்லாமே எனக்கான மோட்சத்தின் பரிசாகவே நினைத்துக் கொள்வேன். ஆடுகள் என் சொற்படி கேட்பதுடன் எனக்குப் பெரிதாக எந்தப் பிரச்சனையும் தருவதில்லை. ஆயினும் முகத்தைச் சுருக்கிக்கொண்டு ஆடுகளைப் மேய்ப்பது ஒரு பெரிய தண்டனை போலவே நடிப்பேன். மனதிலோ மகிழ்ச்சி கரைபுரண்டோடும். ஆனாலும் சில வேளைகளில் தனிமை என்னை வாட்டும். ஆடுகளால் கதைக்க முடியாதல்லவா! அத்துடன் மற்றக் குழந்தைகள் போலவே எனக்கும் கலகலப்பாக இருக்கவேண்டுமென்ற உள்ளார்ந்த ஆசை இருக்கத்தான் செய்தது.

ஒருநாள் காலை, அம்மா காலை உணவாகப் பாலைக் கொடுத்து, விரைவாகப் பாலைக் குடித்துவிட்டு ஆடுகளை மேய்ச்சலுக்கு இட்டுச் செல்லும்படி சொன்னார். பின்பு அவர் வெளியே போய்விட்டார். அவரது காலடிச் சத்தம் மறைந்த உடனே நான் ஓர் துண்டு இறைச்சியை என் வாயினுள் திணித்துக்கொண்டேன். தொண்டையில் சிக்கிக் கொண்ட இறைச்சியை ஒரு கோப்பைத் தண்ணீரின் உதவியுடன் விழுங்கியபடி எனது மூச்சைச் சரிப்படுத்த ஒரு நிமிடம் உட்கார வேண்டியிருந்தது. ஆடுகளும் நானும் பச்சைப்பசேலெனப் புற்கள் அடர்ந்து வளர்ந்திருந்த ஓரிடத்திற்கு வந்து சேர்ந்தோம். ஆடுகளை அங்கேயே மேயவிட்டு நான் காளான் சேகரிக்கச் சென்றேன்.காளான்கள் அவ்வளவாகக் கண்ணில் படவில்லை. திடீரென ஆட்டுக் குட்டியொன்று கத்தும் சத்தத்தை நான் அவதானித்தேன்.

அப்போது நான்கு குட்டிகள் ஒரு புதருக்குள்ளிருந்து வெளியே வந்தன. கண்ணில் கண்ணீருடன் கவனித்தேன். அவைகளும் என்னைப் போலவே மறிக் குட்டிகள். மந்தையுடன் அவைகளைச் சேர்த்துச் சாய்த்துக்கொண்டு போகும்போது எனக்கு மிகவும் மகிழ்வாயிருந்தது. இவைகள் எனது ஆட்டுக்குட்டிகள். நான் தான் இவைகளைக் கண்டு பிடித்தேன். இப்போதுதான் எனக்கு மட்டுமே சொந்தமெனச் சொல்லிக்கொள்ள ஏதோ கிடத்துள்ளது. எனது ஆட்டுக் குட்டிகள்!

மாலையில் மற்றவர்களுக்கும் இது பற்றிச் சொல்ல ஆவலுடன் காத்திருந்தேன். அவர்களும் உண்மையாகவே மகிழ்வார்கள், என்னைப் பெருமைப்படுத்துவார்கள். ஆனால் ஒருமுறை கூட அவர்கள் சிரிக்கவேயில்லை. அம்மா தான் நாளக் காலையில் புதிய ஆட்டுக்குட்டிகளை ஒருமுறை பார்க்க வேண்டுமெனச் சொன்னார். வேறொருவரும் ஒன்றும் சொல்லாதபடியால் ஆட்டுக் குட்டிகள் எனக்குச் சொந்தமா? அல்லது முழுக் குடும்பத்திற்குமா? எனக் கணக்குப் பார்க்கத் தொடங்கினேன். சிலவாரங்கள் கழித்து அப்பா வீட்டிற்கு வந்தார் அவரை வரவேற்கக் கூட எனக்கு நேரமிருக்கவில்லை. அவரின் கையைப்பற்றி ஆட்டுக்குட்டிகளிடம் அவரை அழைத்துச் சென்றேன்.

# எக்ஸாம் என்ரரெயின்ற்மென்ற்


துளசி


கீர்த்தனா


சுயந்தன்


அகல்யா

தீபத்தின் எக்ஸாம் என்ரரெயின்ற்மென்ற் கேள்விகளுடன் களமிறங்கிய நம்மிடம் இந்தவாரம் அகப்பட்டு கொண்டவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்த துளசி, கீர்த்தனா, சுதுமலையை சேர்ந்த அனுசியா, கிளிநொச்சியை சேர்ந்த சுயந்தன்.

விடயத்தை சொன்னதும் நால்வரும் முஷ்டியை முறுக்கிக்கொண்டு தயாராகி விட்டார்கள். அட..இதுசண்டையல்ல, கேள்வி பதில்தான் என்றதும் சற்று ஆசுவாசமாகி, எப்படி விடை சொன்னார்கள் என்பதை படித்து பாருங்கள்.

**கேள்வி: சுவாமி விபுலானந்தர் பிறந்த இடம் எது?**
**விடை: மட்டக்களப்பின் காரைதீவு**

***துளசி:*** மீன்பாடும் தேன்பாடும் மட்டுவில் தான்.

***கீர்த்தனா:*** விபுலானந்தர்... ம்... யோசிக்கனுமே... சின்னவயதில படிச்சது. மறந்திட்டு.

***சுயந்தன்:*** நான் பிறந்த ஊரே மறந்திட்டிதாம். இதுக்க விபுலானந்தர் வேறையா? ஆளை விடுங்க சாமி.

***அகல்யா:*** காரைதீவு

**கேள்வி: வடக்கின் முதலமைச்சர் யார்?**
**விடை: சி.வி.விக்னேஸ்வரன்**

***துளசி:*** இது பெரிய கஸ்ரமான கேள்வியா இருக்கே... கிட்டடியில அங்க பெரிய குத்துவெட்டெல்லாம் நடந்ததா செய்தி வந்ததே... விக்னேஸ்வரன் என்றொருத்தர் இருந்தாரே... அவர்தான் இப்பவும் இருக்கிறாரா? (எங்கயிருந்தெல்லாம் கிளம்பி வந்தாங்களோ)

***கீர்த்தனா:*** முதலமைச்சரா... யாரையோ மாத்தினதா? தெரியலயே... அரசியல் பிடிக்காது. நெக்ஸ்ற் குவேசன்.

***சுயந்தன்:*** முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா. அவர்தான் எங்கட ஒரே நம்பிக்கை

***அகல்யா:*** விக்னேஸ்வரன் ஐயா தான்.

**கேள்வி: திருகோணமலையிலுள்ள சிவன் கோவில்?**
**விடை: திருக்கேதீஸ்வரம்**

***துளசி:*** திருகோணமலை சிவன் கோயிலா?

***கீர்த்தனா:*** ஓ... அதுவா கோணேஸ்வரம்.

***சுயந்தன்:*** சின்னப்பிள்ளைகள் கூட சொல்லும் கோணேஸ்வரம் என்று.

***அகல்யா:*** திருகோணேஸ்வரம்.

**கேள்வி: வடக்கில் வெளியாகும் ஒரேயொரு வண்ணப்பத்திரிகை எது?**
**விடை: தீபம் வாரஇதழ்**

***துளசி:*** நல்லாத் தெரியுமே. தீபம்தான் சூப்பர் ஸ்டார்.

***கீர்த்தனா:*** தீபம் தான் கலர் கலராக கலக்குது.

***சுயந்தன்:*** இப்போதைக்கு தீபம் என்று தான் நினைக்கிறன்.

***அகல்யா:*** தீபம்... தீபம்தான் கெத்து. மற்றதெல்லாம் வெத்து.

ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263





# தென்னை செய்கையாளருக்கு உதவும் அரச அமைப்புக்கள்

பெருந்தோட்ட அமைச்சின் கீழ்க் கடந்த காலங்களில் தென்னைச்சேய்கை, தெங்கு அபிவிருத்தி, மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு என்ற தனியான அமைச்சாக இயங்கியது. அதன் கீழ் 5 சபைகள் நிறுவனங்கள் இயங்குகின்றன.

01. தென்னைப் பயிர்ச்சேய்கை சபை CCB
02. தென்னை ஆராட்சி நிலையம் CRI
03. தெங்கு அபிவிருத்தி அதிகார சபை CDA
04. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் CPI
05. குருணாகல் பெருந்தோட்ட நிறுவனம் KPI

ஆனால் தற்போது திரும்பவும் பெருந் தோட்டத்துறை அமைச்சின் கீழ் மேற்படி சபைகள், நிறுவனங்கள் இயங்குகின்றன. அரசாங்கம் இதனூடாக தென்னைச் செய்கைகளுக்கு உதவியளிக்கின்றது.

### தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை
(Coconut cultivation board)

1971 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இயங்குகிறது. இச் சபையின் தலைமைக் காரியாலயம் பத்தரமுல்ல கொழும்பில் அமைந்துள்ளது. இதன்

### தொலைநோக்கு:

இலங்கையை உலகில் மிகவும் வினைத் திறனுடைய தென்னை உற்பத்தி நாடாக மாற்றுதல்.

### செயற்பணி:

இலங்கையின் உள்நாட்டு நுகர்வு, கேள்வி, மற்றும் ஏற்றுமதி தேவையினைப் பூர்த்தி செய்து தன்னிறைவான நிலையினை அடைந்து கொள்வதன் பொருட்டு உற்பத்தித் திறனான ஆலோசனை மற்றும் பரவலாக்கல் சேவை மூலம், தென்னை உற்பத்தியினை உயர்த்துவதன் ஊடாக தென்னை செய்கை யாளருக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத் தினை அடைந்து கொள்ளச் செய்யும் ஏற்பாடாகும்.

### சேவைகள், தொழிற்பாடுகள்:

1. தென்னைச் செய்கையாளருக்கும், தென்னை அபிவிருத்திக்கும் ஊக்கமளித்து உதவியளித்தல்.
2. வீட்டுத் தோட்டத்திலிருந்து பெருந் தோட்டம் வரை இலவச விரிவாக ஆலோசனை சேவையினை தென்னை செய்கையாளருக்கு வழங்குதல், இச் சேவை அவ்வப்பகுதி தென்னை அபிவி ருத்தி உத்தியோகத்தர்களினால் தோட்டம் அல்லது வீட்டுத்தோட்டம் அமைந்திருக் கும் இடத்தில் மேற்கொள்ளப்படும். தென்னை செய்கையாளருக்கு உதவியாக தென்னை சம்பந்தமான எல்லாப் பிரச்ச னைக்கும் பரிகாரம் காண உதவியளித்தல்.
3. அரசாங்க தென்னை மானியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல், தென்னை மானியத் திட்டங்கள் காலத்திற்குக் காலம் மாறுபடலாம், விபரங் களை அவ்வப்பகுதி தென்னை அபிவி ருத்தி உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாம். தற்போது அரசாங்கம் கீழ்வரும் மானியத் திட்டங்களை தென் னைச் செய்கையாளருக்காக நடைமுறைப் படுத்துகின்றது.

| குறியீடு | திட்டம் |
|---|---|
| NPS | புது நடுகை மீள், கீழ் நடுகை மானியத் திட்டம். |
| RHS | புனருத்தாபரணம் மானியத்திட்டம். |
| MHG | நவநாகரீக வீட்டுத் தோட்ட வேலைத்திட்டம். |
| KPHG | கப்புறுக்க புறவற மானியத்திட்டம் (வீட்டுத்தோட்ட 5 தென்னங்கன்றுகள் விநியோகம்) |
| HG | தவிமகட்ட கப்புறுக்க (வீட்டுத்தோட்டம் 2 தென்னங்கன்றுகள் விநியோகம்) |
| KS | கப்றுக்க சிப்சன வேலைத்திட்டம். |
| CSS | மாட்டுத் தொழுவம் அமைத்தல் செயற்றிட்டம்.. |
| HIS | பைப்நீர்ப்பாசனத் திட்டம். |
| KLS | கப்புறுக்க கடன் திட்டம். |

- தென்னை நாற்று மேடைகளைப் பராமரித்து நல்ல தரமான தென்னங் கன்றுகளை மக்களுக்கு விநியோகித்தல்
- செயல்விளக்க நிலையங்களை நிறுவி தென்னை செய்கையாளருக்கு புதிய விஞ் ஞான முறைகளை அறிமுகப்படுத்தல்.

இலங்கையின் பின்வரும் இடங்களில் மாதிரித் தென்னந்தோட்டங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இலங்கையில் 36 இடங்களில் தென்னை நாற்று மேடைகள் தென்னைப் பயிர்ச்சேய்கை சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

| குறியீடு | திட்டம் |
|---|---|
| நாகன் சோலை தோட்டம் | நிக்கவரட்டிய |
| றன்தெனியா தோட்டம் | வாரியப்பொல |
| லேனவ தோட்டம் | மெல் சிறிபுர |
| போபிட்டிய தோட்டம் | குளியாப்பிட்டிய |
| கேட்லண்ட் தோட்டம் | வெலி பென்னகமுல்ல |
| மகாயாய தோட்டம் | குருநாகல் |
| டேசிவலி தோட்டம் | குருநாகல் மாவத்துகம |
| முந்தல் தோட்டம் | முந்தல் |
| கோம்பான தோட்டம் | அம்பாறை |
| கோறே தோட்டம் | திருக்கோயில் |
| பாசிக்குடா தோட்டம் | மட்டக்களப்பு |
| மயிலம்பாவெளித் தோட்டம் | மட்டக்களப்பு |
| அலம்பில் தோட்டம் | முல்லைத்தீவு |
| பளை தோட்டம் | பளை |

புலநாள் (field day), கருத்தரங்கு (seminars), கண்காட்சி (exhibition), தென்னை செய்கையாளருக்குரிய பயிற்சி வகுப்பு (farmers training class), குழுக்கூட்டம் (group discussion), செயல் விளக்க எடுத்துக்காட்டு (method result demonstration), அத்துடன் method demonstration என்பவற்றை வைத்து தென்னை செய்கையாளருக்கு விரிவாக விளக்கம் அளித்தல்.

### பயிர்ப் பாதுகாப்பு சேவை வழங்கல்.:

மேற்கூறிய தொழிற்பாடுகளை இலங்கை யில் அவ்வப்பகுதி தென்னை பயிர்ச்சேய்கை சபையின் பிராந்திய காரியாலயங்கள் அல்லது அப்பகுதி தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாகவும் (அவ்வப்பகுதி கமநல சேவை நிலையங்களில், தென்னைப் பயிர்ச்சேய்கை சபை காரியாலயத்தில்) புதன்கிழமைகளில் தொடர்பு கொண்டு பசளைகளையும் தென்னங்கன்றுகளையும் இலவச ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளமுடியம்.

### குறிப்பு:

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்ட பிராந்தியக் காரியாலயம் நல்லூர் யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவு மாவட்டத் தென்னைச் செய்கை யாளர்கள் திருகோணமலை பிராந்தியக் காரியாலயத்திலும் மன்னார் மாவட்ட தென்னைச் செய்கையாளர்கள் அநுராதபுரம் பிராந்தியக் காரியாலயத்திலும் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் மயிலம்பா வெளியிலும், அம்பாறையில் அம்பாறை நகரத்தில் அமைந்துள்ள காரியாலயங்களில் தொடர்பு கொண்டு மேற்படி சேவையினைப் பெற முடியும். ( நாட்டின் ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திலும் அமைந்துள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் காரியாலயத்தில் புதன்கிழமைகளில் அலுவலக நேரத்தில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரைச் சந்தித்து தேவையான தென்னை சம்பந்தமான விபரங்களையும், உதவிகளையும் பெற்றுக் கொள்ளமுடியும்.)

யாழ் எலக்ரோனிக்ஸ் & வோச் வேக்ஸ் 20ம் ஆண்டில் கால் பதிக்கின்றது (1996 – 2016)





மணிக்கூட்டுத் தேவையின் தனிப்பட்ட இடம்...

உங்களுக்குத் தேவையான மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை மணிக்கூடுகள், கல்குலேட்டர்கள் தரமானதாகவும், நியாய விலையிலும் அனுபவமிக்க திருத்துனர்களைக் கொண்டு இயங்காத காலத்தை உத்தரவாதத்துடன் இயக்கித் தருகின்றோம்.

20 வருட காலமாக இயங்கிவரும் யாழ் எலக்ரோனிக்ஸ் & வோச் வேக்ஸ் தனக்கென தனி இடத்தையும், வாடிக்கையாளரையும் பெற்று திகழ்கின்றது.

"இயங்காத காலத்தை இயக்குபவர்"

இல, 55–57, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. : 077 613 6007



## தெலுங்கு நயன்தாரா



தமிழில் நயன்தாரா எப்படியோ, அப்படி தெலுங்கில் ராகுல் பரீத் சிங். தெலுங்கில் உள்ள அத்தனை முன்னணி ஹீரோக்களுடனும் டூயட் பாடிக் கொண்டிருக்கிறார். இத்தனைக்கும் அங்கு ஒரு மாஸ் ஹிட் அம்மணி கொடுக்கவில்லை. ஏனோ திரையுலகம் அவரை அள்ளி அணைத்துக் கொண்டு விட்டது. காஜல் அகர்வால், சமந்தா எல்லாம் ராகுலிற்கு பின்னால்த்தான் என்றால் அம்மணியிடம் தெலுங்கு எப்படி சொக்கிப் போயுள்ளதென்று பாருங்களேன். இப்பொழுது விடயம் என்னவென்றால் அம்மணி தமிழில் ரீ என்ரியாகிறார். அதுவும் விஷால் ஜோடியாக. இதனால் தமிழில் முன்னணியிலுள்ள நாயகிகள் வியர்த்துப் போயுள்ளனராம். நட்சத்திர கிரிக்கெட் போட்டியில் அம்மணி கலந்து கொண்டதும் விஷாலிற்காகத்தானாம்.

## ஆறுதல் சொன்ன நாயகன்



"சாரல்" படத்தின் பாடல் வெளியீடு அண்மையில் நடந்தது. நாயகி ஸ்ரீபிரியங்கா உரையாற்றும் போது மனதிற்குள் அடக்கி வைத்திருந்ததெல்லாவற்றையும் கொட்டித் தீர்த்து விட்டார். "தமிழில் நான் நடித்த மூன்று படங்களிலுமே நல்ல பெயர். ஆனாலும் எனக்கு நிறைய வாய்ப்புக்கள் வரவில்லை. நான் தமிழ் பெண் என்பதுதான் காரணமா? இதையெல்லாம் மனதிற்குள் மறைத்து வைக்ககூடாதென்பதற்காக வெளியில் சொன்னேன்" என்றார். நிகழ்ச்சிக்கு வந்திருந்த விஜய் சேதுபதிதான் ஸ்ரீபிரியங்காவிற்கு ஆறுதல் சொன்னார். பார்க்க அழகாகவும் இருக்கிறீர்கள், விரைவில் பெரிய வாய்ப்புக்கள் வரும் என அறுதல் சொன்னார்.

## மூட்டைகட்டிய நாயகி



மும்பையிலிருந்து நாயகிகள் தமிழில் வருவது ஒன்றும் புதிதில்லை. ஆனால் சிருஷ்டி டாங்கோவின் கதை சற்று வித்தியாசமானது. இந்திப்பெண்ணாண அவர் இதுவரை ஒரு இந்திப்படமும் நடிக்கவில்லை. பத்துவரையான தமிழ் படங்கள் நடித்துவிட்டார். ஆனால் ஒன்றுகூட தேறவில்லையென்பதுதான் அவரது வருத்தம். இப்படியே போனால் வேலைக்காகாது என்பதை புரிந்த அம்மணி இப்பொழுதுதான் எச்சரிக்கையாகியுள்ளார். வரவுள்ள தர்மதுரை படத்தைதான் கொஞ்சம் எதிர்பார்த்திருக்கிறார். அதிலும் தமன்னாதான் நாயகி. இந்தியில் கவனம் செலுத்துவோம் என முடிவுபண்ணி, மும்பைக்கு மூட்டை கட்டிவிட்டாராம்.

## சன்னியின் புது அவதாரம்



சன்னி லியோனிற்கு முகவரி தேவையில்லை. முகவரி கேட்பவர் நிச்சயம் வேற்றுகிரகவாசியாகத்தான் இருப்பார். ஆபாசப்பட நடிகையாக திரைக்குள் நுழைந்து இன்று இந்தி சினிமாவில் தவிர்க்கப்பட முடியாத ஒருவர். நடிகையாக இருந்த சன்னி புதிதாக எடுத்துள்ள அவதாரம் எழுத்தாளர். காதல் ரசம் சொட்டும் சிறுகதைகள் எழுதியுள்ளார். "சுவீற் ரீம்ஸ்" என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளது. பெண்களின் தாம்பத்திய வாழ்வை அடிப்படையாக கொண்ட கதைகளாம்.

## இஸ்டப்பட்டால் ஓகேயாம் இஷா

தமிழில் "தில்லுமுல்லு" படத்திற்கு பிறகு வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை இஷா தல்வரிற்கு. அவர் மலையாளத்தில் நடித்த "தட்டத்தின் மறையத்து" தமிழில் ரீமேக் ஆகவுள்ளது. இதிலும் இஷாதான் நடிக்கிறார். இதற்குள் கல்யாணம் செய்யாமல் சேர்ந்து வாழ்வது பற்றி யாரோ இஷாவிடம் கேட்டுள்ளனர். இரண்டுபேர் விரும்பி அப்படி வாழ்ந்தால் நாம் என்னத்தை சொல்ல என இஷா திருப்பிக் கேட்டுள்ளார். "திருமணம் செய்யாமல் எனக்குத் தெரிந்த பலரும் வாழ்கிறார்கள். அவர்கள் சந்தோசமாகவும் இருக்கிறார்கள். அது அவர்கள் விருப்பம். இதில் நான் என்னத்தை சொல்ல" என கேட்டுள்ளார்.

# டூரிங் டாக்கீஸ்





## விலகிய சாய் பல்லவி

மணிரத்தினம் இயக்க கார்த்தி நடிக்கும் புதிய படத்தில் ஹீரோயினாக தேர்வானவர் சாய் பல்லவி. திடீரென அவர் அதிலிருந்து விலகிக் கொண்டுவிட்டார். படத்தில் நாயகனும், நாயகியும் கொஞ்சம் எக்குத்தப்பாக இருக்கும் சீன் புதிதாக சேர்க்கப்பட்டதாலேயே சாய் பல்லவி விலகிக் கொண்டதாக கூறப்படுகிறது. “கதையில் செய்யப்பட்ட மாற்றத்தின்படி அந்த வேடத்திற்கு நான் பொருத்தமாக இருக்க மாட்டேன். தனது கதைக்கு யார் சிறந்தவர் என்பது மணிசாருக்கு தெரியும்“ என்றார். சாய் பல்லவிக்காக இந்தி நடிகை அதிதி ராவ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.



## கைழுவிய தனுஷ்

அனிருத்தை ஒரேயடியாக கைகழுவி விட்டாராம் தனுஷ். தனுஷின் மனைவி ஐஸ்வர்யாவின் உறவுக்கார பையனான அனிருத்தை வளர்த்து விட்டது தனுஷ். குறுகிய காலத்திலேயே முன்னணி அசையமைப்பாளரானார் அனிருத். அதன் பின்னர் அவர் நட்பு பாராட்டியதெல்லாம் தனுஷிற்கு ஆகாதவர்களுடன். முதலில் சிம்பு. இப்பொழுது சிவகார்த்திகேயன். இதனால் தனது “கொடி“ படத்தில் இசையமைப்பாளரை மாற்றினார் தனுஷ். அடுத்து கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் தனுஸ் நடிக்கவுள்ள படத்திலும் அனிருத் மிஸ்ஸிங். சிவகார்த்திகேயன் தனது படங்களில் அனிருத்தை தீவிரமாக சிபாரிசு செய்கிறாராம்.

## மலையாள நாயகி

ஆன்ரியா என்றாலே மர்மம் என்கிறார்கள். அவருக்கு மனேஜர் உள்ளிட்ட எந்த தொடர்பு வழிகளும் கிடையாது. நெருக்கமான சில ஹீரோக்களுடன் மட்டும் போனில் தொடர்பை வைத்துள்ளார். இப்படியான காரணங்களால் தமிழில் வாய்ப்புக்கள் இல்லாமல் போனவர் தற்போது மலையாளகரையில் ஒதுங்கியுள்ளார். ஏற்கனவே அங்கு சில படங்கள் நடித்துவிட்டவர், தற்போது மம்முட்டியுடன் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். தமிழில் சிறுவேடங்களில் நடித்த “இது நம்ம ஆளு“, “தரமணி“ இரண்டு படங்களும் முடங்கிக் கிடப்பது வேறு அவருக்கு அப்செட்டாம்.

சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392





# துர்முகி வருஷம்
# சித்திரைப்புத்தாண்டு இராசிகளுக்குரிய பலாபலன்கள்

## சிம்மராசி



**சாதகமானவை:** இல்லத்தில் சிறப்பு நிகழ்வுகள், சில கருமங்களில் நல்ல வெற்றி கிட்டுதல், தானதர்ம காரியங்களில் ஈடுபடுதல், நல்ல பதவியில் அமர்தல், போட்டிப்பரீட்சைகளில் வெற்றி கிட்டுதல், சிநேகிதரால் நன்மை பெறுதல், ஆடைஆபரணசுகம், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவுதல், தனதானிய விருத்தி, சமூகசேவை, சமாதானம் என்பவற்றை பேணி நடத்தல், நல்ல அதிகார தோரணை கொண்டு செயற்படுதல், எதிரிகளை வெற்றி கொள்ளல், வெளிநாடு செல்லும் முயற்சிகள் சாத்தியப்படுதல், இனசனபந்துக்களுடன் கூடிமகிழ்தல், நல்ல மதிப்பு புகழ் பெறுதல், பணியாட்களால் நன்மைகள் பெறுதல், வருடமுடிவில் பலவித நன்மைகள், லாபம், சுகம், என்பவை கிடைக்கவும், தேகசுகம் நல்ல நிலையில் முன்னேற்றம் பெறவும், பொருளாதாரம் சீரான நிலைக்குச் செல்லவும், அரச ஊழியர்களாயின் சம்பள மாற்றங்களால் நன்மை பெறவும், திருமணத்தை எதிர்பார்த்து உள்ளவர்களுக்கு அவை கைகூடவும், மாணவர்களில் கல்வி முயற்சிகள் சிறப்புப் பலனைப் பெறவும் செய்யும்.

**பாதகமானவை:** இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படுதல், சிலருடன் வாக்குவாதப்படும் நிலை இருத்தல், சில கருமங்களில் தாமத நிலை காணுதல், சில கெட்ட நண்பர்களால் கெடுதல்கள் தோன்றி மறைதல், இனசனத்தில் எவரையாவது பிரிதல், சிறுசிறு அலைச்சல் நிலை இருத்தல், குடும்பத்தில் சச்சரவு நிலை வந்து மறைதல், திருடர் தொல்லை காணுதல், பொருள் விரயம், சில சந்தர்ப்பங்களில் அவமானப்படும் நிலை வந்து மறைதல், மனவியாக்கிய நிலையும் வந்து இறுதியில் சுபமான முடிவும் உண்டு.

**முக்கிய கவனிப்பு:** சனிமாற்றம் 4ஆம் நிலை, வியாழமாற்றம் 2 ஆம் நிலைக்கு வருதல், ராகு, கேது 1ஆம், 7ஆம் நிலையிலிருத்தல், நல்லது கெட்டது நன்மை தீமை என மாறி மாறிப் பலன் அமையும், சனீஸ்வரர், ஆஞ்ஞநேயர், தட்சனாமூர்த்தி, விநாயகர், தெய்வ வழிபாடுகள் இடையிடையே செய்து வருவது சுகப்பலனுக்கு உதவும்.

## கன்னி



**சாதகமானவை:** விவேகமாகச் செயற்படுதல், பல இடங்களுக்கும் சென்று திரும்புதல், ஐஸ்வரியமான நிலை காணுதல், தொழில் நிலை வலுப்படுதல், ஊக்கம், உழைப்பு அதிகம் இருத்தல், சில சன்மானங்கள் கிடைத்தல், ஆடைஆபரணசுகம் கிடைத்தல், கால் நடை வளப்போர் நன்மை பெறுதல், எதிரி பகையாளிகளை வெற்றி கொள்ளுதல், பெரியோர்களால் மதிக்கப்படுதல், காணி பூமி தொடர்பில் நல்ல முடிவு எட்டுதல், கணவன், மனைவி உறவு வலுவாய் அமைதல், பொருள் வரவு, சாந்தி சமாதானம் இவற்றிற்காய் உழைத்தல், இனசனம் தொடர்பில் நன்மை உண்டாதல், வீட்டில் சுபங்கள் கருமங்கள் நடந்தேறுதல், பதவி நிலைகளில் நல்ல மாற்றம் அமைதல், மனச்சந்தோசமான நிலை இருத்தல், தேகசுகம் நல்ல முன்னேற்றம் காணுதல், மனதில் எண்ணிய கருமம் கைகூடிவருதல், தனதானிய வியாபார லாபம் உண்டாதல், நல்ல மதிப்பு, கௌரவம், குடும்பசுகம் என்பவை வருட இறுதியில் காணவும், வெளிநாட்டுத் தொடர்புகள் அமையவும், விவாக முயற்சிகள் இருப்போர்க்கு நல்ல தெசாபுத்தி நடந்தேறின் அவை கைகூடிவரவும், கல்வி சார்ந்த முயற்சிகளில் ஈடுபட்டு உள்ளோர்க்கு நல்ல பெறுபேறுகள் அமையவும், பொருள் வரவு நிம்மதியும் தரும்.

**பாதகமானவை:** மனதில் வீணான பயம் உண்டாதல், சில சிநேகிதரால் கஷ்டநிலை வந்து மறையும், கொடுக்கல் வாங்கல் பிணக்குகளில் சிக்கிக் கொள்ளல், இடையிடையே சில அவமானப்படும் நிலை, மனக்கவலை, வகிக்கும் பதவி நிலைகளில் மாற்றம் வருதல், தேகசுகம் இடையிடையே பாதித்தல், பிள்ளைகளால் மனதில் கவலையுண்டாதல், சில வீண் பிரயோசமான செயலில் ஈடுபடுதல், பெண்கள் சிலரால் துன்பம் அனுபவித்தல், போன்றவையும் அமையப்பெறும்.

**முக்கிய கவனிப்பு:** சனி மாற்றம் 3 ஆம் நிலை, வியாழ மாற்றம் ஜென்மம் 1 ஆம் நிலைக்கு வருதல், ராகு, கேது 12 ஆம், 6 ஆம், நிலையில் இருத்தல், நன்மைகள் அதிகமாயும், கெடுதல்கள் குறைவாயும் இருக்கப் பெறுதல், மகாவிஸ்னு வழிபாடும், தெட்சணாமூர்த்தி வழிபாடும் இருக்கச் செய்வது அவசியமாகும்.

## துலாராசி



**சாதகமானவை:** காணி, பூமி தொடர்பில் நல்ல முடிவுகள் எட்டப்படுதல், தனதானிய லாபம் அமைதல், தான தரும கருமங்களில் ஈடுபடுதல். செய் கருமங்களில் நல்ல வெற்றி கிட்டுதல், நல்ல போஜனம், நல்ல சயனம் காணப்படுதல், பொதுமக்களிடம் நல்ல மதிப்பு பெறுதல், மனதில் சந்தோச நிலை, சிநேகிதரால் நன்மை, அதிகாரம் கொண்டு செயற்படுதல், குடும்பசுகம் பெறுதல், மனதில் எண்ணிய கருமம் கைகூடுதல், எதிர் பகையாளிகளை வெற்றி கொள்ளுதல், இனசனபந்து சேர்க்கை காணப்படுதல், சாந்தி, சமாதானம், சமூகசேவையில் ஈடுபடுதல், தேகசுகம் நன்றாய்க் காணப்படுதல், மனதில் எண்ணியை படிப்படியாய் கைகூடுதல், பொருளாதார நிலைகள் சுமூகமாய் அமைதல், உத்தியோகத்தர்கள் கணிசமான நன்மை பெறவும், வியாபார முயற்சிகளில் உள்ளோர் கணிசமான லாபம் ஈட்டிக் கொள்ளவும், விவாகம் சார்ந்த முயற்சிகளில் உள்ளோர் தாமத நிலையில் பலன்பெறவும், மாணவர்கள் கல்வி முயற்சிகளால் உற்சாகம் பெறவும் பலன் அமையும்.

**பாதகமானவை:** நோய், நொடி காணப்படுதல், தேகம் பலவீனம் பெறுதல், வீண் மனப்பயம் கொள்ளுதல், பிள்ளைகளால் கவலை, மனச்சோர்வு, பெண்களின் சிநேகித தொடர்பால் கஸ்டம் துன்பம் அனுபவித்தல், கொடுக்கல், வாங்கல் பிணக்குகள் தோன்றி மறைதல், நெருப்பு, வெப்பம் இவற்றால் துன்பம் அனுபவித்தல், திருட்டுக் கொடுத்தல் உடலில் காயம் உண்டாதல், சில முயற்சிகள் பயனற்றவையாகக் காணப்படுதல், வீண்பழி அமைதல், கோபமிகுதி இருத்தல், அதிக செலவு, பல இடங்களுக்குச் செல்லுதல் இருக்கும்.

**முக்கிய கவனிப்பு:** சனிமாற்றம் நிலை 2 ஆம் நிலை, 7 அரை கடைக்கூறு, வியாழமாற்றம், 12 ஆம் நிலை பெறுதல், ராகுகேது 11 ஆம், 5ஆம் நிலையில் உள்ளதும் நன்மைகள் அதிகளவிலும் பாதிப்புகளை குறைந்தளவிலும் காட்டி வரும்.

## விருச்சிகம்.



**சாதகமானவை:** கருமங்களில் நல்ல பெறுபேறு கிட்டுதல், எதிரி பகையாளிகளை வெற்றிகொள்ளுதல், நல்ல மதிப்பு, நல்ல உடல் உழைப்பு இருந்துவருதல், பதவிகளில் நல்ல உயர்வு நிலை பெறுதல், கணவன், மனைவி உறவுகள் நல்ல சுமூகமான நிலையில் தொடர்தல், தானதரும காரியங்களில் ஈடுபடுதல், வாகனம் தொடர்பான நன்மைகள் கிட்டுதல், ஆடை ஆபரண சேர்க்கை இருத்தல், போட்டிப்பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளை அள்ளி வருதல், தனதானிய லாபம் இருத்தல், சிநேகிதரால் நன்மை கிட்டுதல், மனச் சந்தோசம் இருந்து வருதல், இல்லறச் சிறப்புக்கள் அமைதல், வேறு நாடுகள் அல்லது வேறு இடங்களுக்குச் சென்று வருதல், காணி, பூமி நன்மைகள் கிடைக்கப்பெறுதல், இனசனபந்துக்கள் சேர்க்கை, நிகழ்வுகள் அமைதல், வேலையாட்கள், பணியாட்கள் நன்மை கிடைக்கப்பெறுதல், தேகசுகம் நன்றாயமைதல், அரச பணியாளர்கள் நன்மதிப்புப் பெறுதல், வியாபார முயற்சியாளர்கள் கணிசமான நன்மை பெறுதல், திருமணத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு நற்பலன் அமையும், வெளிநாட்டுப்பயணங்கள் சாதக நிலை தரவும், கல்வியில் ஈடுபட்டவர்களுக்கு நல்ல பெறுபேறுகள் கிட்டவும் பலன் அமையும்.

**பாதகமானவை:** இடையிடையே தேகநலன் குறைவாய் அமைதல், சிலரைப் பகைக்கும் நிலை, காரியக் கெடுதிகள் உண்டாதல், பொருள் விரயம், குடும்ப மனஸ்தாபம், கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் இருந்து வருதல், அலைச்சல்கள் மிகுதியாய் இருத்தல், ஆயுதங்கள் விஷம் சம்பந்தப்பட்டவற்றால் நோய் துன்பம் துயரம் சந்தித்தல், தொழில் வருவாய் மந்த நிலை பெறுதல், வீண் பழி கேட்கும் நிலை, பணக்குறைவு, கோபப்படுதல், சிறுசிறு அவமானம் சந்திக்கும் நிலையும் காட்டும்.

**முக்கியகுறிப்பு:** சனி மாற்றம் ஜென்மம் 1ஆம் நிலை, 7 அரை நடுக்கூறு நிலை, வியாழமாற்றம், 11ஆம் நிலைக்கு வருதல், ராகு கேது 10 ஆம், 4ஆம் நிலைகளில் அமைந்துள்ளதும் நன்மைகள் இருக்கும் அதே வேளை பகை, பணவிரயம் பலனமையும், இவற்றை அனுபவிக்கச் செய்யும்.

ஏனைய இராசிகளுடைய பலாபலன்களை தொடர்ந்துவரும் வார வெளியீடுகளில் பார்க்கலாம்.

01.05.2016 முதல் 07.05.2016 வரை சந்திராஷ்டம நிலை பின்வருமாறு அமையும்.

கடகராசி: 1,2 திகதிகள்.
சிம்மராசி: 3,4 திகதிகள்.
கன்னிராசி: 5,6 திகதிகள்.
துலாராசி: 7 திகதிகள்.

**ஏனைய இராசிகளுக்கு இவ்வாரம் சந்திராஷ்டமம் இல்லை.**

இந்த சந்திராஷ்டம நாட்களில் நோய், பிணி, துன்பம், துயரம், கஸ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்பு என்பன நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் "திரிதினஸ்ப்ருக்கு" என்பதன் பொருள்.

ஒரு திதியானது, ஒரு நட்சத்திரமாவது, ஒரு யோகமாவது மூன்று நாட்களில் கலந்திருப்பது "திரிதினஸ்ப்ருக்கு" எனப் பொருள்படும்.

இந்தநாள் சுபகருமங்களுக்கு விலக்கப்பட்ட நாளாகும்.




# அண்ணாவின் தம்பிகள்

**M.G.R.** முதல் முறையாக 1977ல் ஆட்சியைப் பிடித்து முதல்வராக இருந்த நேரம். எதிர்க்கட்சித் தலைவராக திமுக தலைவர் கருணாநிதி. சட்டப் பேரவையில் சூடும் சுவையுமான ஒரு விவாதம். ஒரு கட்டத்தில் கருணாநிதி பேசும்போது, "ஆட்சி அதிகாரம் எங்களுக்கு புதிதல்ல. நாங்கள் சாப்பிட்டுப் போட்ட எச்சில் இலைதான் அது" என்றார். எம்.ஜி.ஆர். எழுந்தார். தனக்கே உரிய டிரேட் மார்க் புன்னகையுடன் சொன்னார், "நீங்கள் எவ்வளவு சாப்பிட்டீர்கள் என்று கணக்கு பார்க்கத்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம்."

இப்படி, அரசியல் களத்திலே எதிரெதிரே நின்று விவாதங்களில் ஈடுபட்டாலும் அறிஞர் அண்ணாவின் தம்பிகளான இரண்டு பேருக்கும் இடையே அரசியலைத் தாண்டிய ஆழமான நட்பு நிலவி வந்தது. தனது நாற்பதாண்டு கால நண்பர் என்று எம்.ஜி.ஆரை கருணாநிதி குறிப்பிடுவார். எம்.ஜி.ஆரும் மேடைகளில் 'நண்பர் கலைஞர் கருணாநிதி' என்றே விளித்து பேசுவார்.

அரசியல் உக்கிரம் தகித்தபோதும் அதையும் தாண்டிய நட்பு குளிர்ச்சி இருவருக்கும் இடையே நிலவியதற்கு சான்றுகள் ஏராளம். அதில் ஒரு சம்பவம்.

எம்.ஜி.ஆர். தலைமையிலான அதிமுக அரசைக் கண்டித்து 1982ம் ஆண்டு 'நீதிகேட்டு நெடும் பயணம்' என்ற பெயரில் மதுரையில் இருந்து திருச்செந்தூருக்கு திமுக தலைவர் கருணாநிதி தொண்டர்களுடன் பாத யாத்திரையாக சென்றார். தொடர்ந்து நடந்ததில் அவரது உடல் நலம் பாதிக்கப்பட்டது. காலில் கொப்புளங்கள் ஏற்பட்டன. அப்படியும் பயணத்தை தொடர்ந்தார்.

விஷயம் முதல்வர் எம்.ஜி.ஆரின் கவனத்துக்குச் சென்றது. உடனடியாக தொலைபேசி மூலம் கருணாநிதியை தொடர்பு கொண்டார். உடல் நலன் குறித்து அக்கறையோடு விசாரித்தார். அதோடு, கருணாநிதியின் உடல் நிலையை கவனிக்க ஒரு மருத்துவர் குழுவையும் அனுப்பி வைத்தார். இது இருவருக்குமான நட்பின் அடையாளம் மட்டுமல்ல, தனது அரசை எதிர்த்து பாத யாத்திரை போகிறாரே? தனது அரசியல் எதிரியாயிற்றே? என்றெல்லாம் கருதாமல் கருணாநிதியின் உடல் நலனில் எம்.ஜி.ஆர். கொண்ட அக்கறையையும் அவரின் அன்பு உள்ளத்தையும் காட்டும் நிகழ்ச்சி இது.

இருவருக்கும் இடையிலான நட்பின் ஆழத்துக்கு இன்னொரு சம்பவம்.

'எங்கள் தங்கம்'... எம்.ஜி.ஆரை ரசிகர்கள் இப்படி அழைப்பதற்கு காரணமான அவர் நடித்து மேகலா பிக்சர்ஸ் சார்பில் தயாரிக்கப்பட்ட படம். மேகலா பிக்சர்ஸ் நிறுவனத்தின் கடனை 'எங்கள் தங்கம்' படத்தின் மூலம் கிடைத்த லாபத்தால் அடைத்ததாக அதன் வெற்றி விழாவில் முரசொலி மாறன் குறிப்பிட்டார்.

படத்தின் பாடல்கள் எல்லாமே சூப்பர் ஹிட். என்றாலும் இரண்டு பாடல்கள் ரசிகர்களுக்கு மிகவும் உற்சாகத்தை ஏற்படுத்தும். ஒன்று.. எம்.ஜி.ஆரின் கொள்கைப் பாடலான 'நான் செத்துப் பிழைச்சவன்டா.... '

மற்றொன்று ஜெயலலிதாவுடன் எம்.ஜி.ஆர். பாடும் டூயட் 'நான் அளவோடு ரசிப்பவன்...' இந்த இரண்டு பாடல்களுக்கும் ரசிகர்கள் முக்கியத்துவம் கொடுக்கக் காரணம் அதில் உள்ள சிறப்பான வரிகள். இரண்டு பாடல்களையும் எழுதியவர் கவிஞர் வாலி.

'நான் அளவோடு ரசிப்பவன்...' பாடலுக்கான முதல் வரியை எழுதி விட்டார் வாலி. என்ன காரணமோ தெரியவில்லை, அன்று அவருக்கு அடுத்த வரி உடனடியாக வரவில்லை. அப்போது மேகலா பிக்சர்ஸ் நிறுவனத்துக்கு கருணாநிதி வந்தார். வாலியைப் பார்த்து 'பல்லவி எழுதி விட்டீர்களா?' என்று கேட்டார்.

'நான் அளவோடு ரசிப்பவன்....' முதல் வரியை சொன்னார் வாலி.

'எதையும் அளவின்றி கொடுப்பவன்....' இரண்டாவது வரி வந்தது கருணாநிதியிடம் இருந்து.

எம்.ஜி.ஆரின் வள்ளல்தன்மையை மனதில் கொண்டு கருணாநிதி கூறிய இந்த வரிக்குப் பிறகு பாடல் கிடுகிடுவென எழுதி முடிக்கப்பட்டு அன்று மாலையே ஒலிப் பதிவும் ஆகிவிட்டது.

பாடல் எம்.ஜி.ஆருக்குப் போனது. ஆனால், இரண்டாவது வரியை வாலிக்கு கருணாநிதி எடுத்துக் கொடுத்த விஷயம் எம்.ஜி.ஆருக்குத் தெரியாது. சில நாட்கள் கழித்து வாஹினி ஸ்டூடியோவில் வேறு ஒரு படத்தின் படப்பிடிப்பில் இருந்த எம்.ஜி.ஆரை சந்தித்தார் வாலி.

அவரை வரவேற்று "வாங்க ஆண்டவனே. (தனக்கு நெருக்கமான வர்களை எம்.ஜி.ஆர் இப்படி அழைப்பது வழக்கம்) 'அளவோடு ரசிப்பவன்' பாட்டு பிரமாதம். அதிலும் அந்த இரண்டாவது வரி அருமை" என்று கூறிய எம்.ஜி.ஆர். அன்பின் மிகுதியால் வாலியை கட்டி அணைத்து நெற்றியில் முத்தமிட்டார்.

"அண்ணே, நீங்க இந்த முத்தத்தை கருணாநிதிக்குத்தான் கொடுக்கணும்" வாலியின் ரியாக் ஷன்.

"ஏன்?" எம்.ஜி.ஆர். புரியாமல் கேட்டார். விஷயத்தை வாலி சொன்னதும் சிந்தனையில் ஆழ்ந்தார் எம்.ஜி.ஆர். அதன் எதிரொலி சில நாட்களுக்குப் பின் அவரிடம் இருந்து வெளிப்பட்டது.

'நான் செத்துப் பிழைச்சவன்டா.. எமனைப் பார்த்து சிரிச்சவன்டா...' பாடலின் பல்லவியை எழுதி எம்.ஜி.ஆரி டம் காட்டினார் வாலி. துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் எம்.ஜி.ஆர். உயிர்பிழைத்த பிறகு வெளியான இந்தப் பாடல் அவருக்கு கச்சிதமாக பொருந்தியது.

திருப்தியடைந்த எம்.ஜி.ஆர். வாலியிடம் சொன்னார்: "ஆண்டவனே, இரண்டாவது சரணத்திலே இந்தி எதிர்ப்பு போராட்டத்தின்போது கருணாநிதி தண்டவாளத்தில் தலை வைத்து படுத்தது பற்றி நாலு வரியிலே நறுக்குன்னு எழுதிடுங்க."

இதையடுத்துப் பிறந்த வரிகள்தான்...

'ஓடும் ரயிலை இடைமறித்து
அதன் பாதையில் தனது தலைவைத்து
உயிரையும் துரும்பாய்தான் மதித்து
தமிழ் பெயரைக் காத்த கூட்டமிது'

தனது கொடை உள்ளத்தை 'அளவின்றி கொடுப்பவன்...' என்று புகழ்ந்து அடியெடுத்துக் கொடுத்த கருணாநிதியின் போர்க்குணத்துக்கு எம்.ஜி.ஆரின் பதில் மரியாதை.

'எங்கள் தங்கம்' படத்தின் ஆரம்பத்தில் அப்போது சிறுசேமிப்புத் துறை தலைவராக இருந்த எம்.ஜி.ஆர். தனது வழக்கமான தொப்பி, கண்ணாடியுடன் சிறுசேமிப்புத் துறை தலைவராகவே வருவார். அவரிடம் தங்கம் பாத்திரத்தில் நடிக்கும் எம்.ஜி.ஆர். நிதி கொடுப்பார். எம்.ஜி.ஆருக்கு தமிழக அரசின் லாட்டரி சீட்டில் பரிசு விழும் (அப்போது லாட்டரி சீட்டு இருந்தது). அந்தப் பரிசை எம்.ஜி.ஆருக்கு அண்ணா வழங்குவது போல ஒரு காட்சி. மொட்டை அடித்துக் கொண்டு பாகவதர் வேடத்தில் எம்.ஜி.ஆர். கதாகாலட்சேபம் செய்யும் காட்சி என்று படத்தில் 'ஹைலைட்'கள் ஏராளம்.










# பெண்ணெழுத்து 1

பெண்உரிமைக்காகவும், பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராகவும் குரல் கொடுக்கும் பெண்களும் மிகக்குறைவுதான். எந்தச்சந்தர்ப்பத்திலும் தனது உரிமைகளை கேட்டுப்பெறவும் பெண்கள் தயங்ககூடாது. அங்கீகாரத்தை பெற தொடர்ந்து போராட வேண்டும்

பி.சியா
siya@deepam.lk

ஆணும் பெண்ணும் சரிசமம் என்பது ஒரு பாரம்பரிய சொல்லாடலாகத்தான் உள்ளது. ஏனெனில், இந்த உலகம் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமனாக இருக்கவில்லை. இன்று நேற்றல்ல, புராணகாலம் தொடக்கம் இதுதான் நிலை. ஐதீகங்களாலும், வரலாறுகளாலும், கலாசாரம், பண்பாடு போன்றவற்றாலும் பெண்கள் மீது கண்ணிற்கு தெரியாத ஒரு கலாசார, கட்டுப்பாட்டு மாயவலை போர்த்தப்பட்டுள்ளது.

புராணங்களில் சீதைதான் தீக்குளித்தாள். ஆயர்பாடியில் கண்ணனின் சேஷ்டைகளிற்கு வைக்கப்பட்ட நாகரிகமான பெயர் 'குறும்புத்தனம்'. இதுவே ஒரு பெண்ணாக இருந்திருந்தால் அவள் புராணங்களில் பரத்தையாகத்தான் சித்தரிக்கப்பட்டிருப்பாள்.

சீதை தீக்குளித்து தன் கற்பை நிரூபித்தாள் என சொல்லப்படுவதே ஒரு ஆணாதிக்க வெளிப்பாடுதான். எண்ணங்களாலும், கலாசாரங்களாலும் பெண்கள் மீது மாயவலையொன்றை போர்த்த ஆண்களால் புராண காலத்திலேயே ஆரம்பித்த கருத்து யுத்தத்தின் ஆரம்பம் இது.

முன்னரை விட இப்பொழுது நிலைமைகளில் முன்னேற்றம் உள்ளபோதும், பல்லாயிரம் ஆண்டுகால பண்பாட்டு மனம் இலகுவில் மாற்றமடையாது. மகளிர்தினம் என வருடத்திற்கொருமுறை அனுட்டிக்கப்பட்டாலும், அவற்றின் பொருள் என்ன?

பட்டாடை உடுத்தி பெண்கள் தத்தமது அலுவலகங்களில் சென்று சில கலைநிகழ்வுகளில் கலந்து கொள்வதுடன் எல்லாம் முடிகிறது.

வீடுகளில், அலுவலகங்களில், பொது இடங்களில் பெண்கள் தொடர்பான மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா? இப்பொழுதும் பெண்களின் ஆடை, செயற்பாடுகளில் நளினமான கருத்துச்சொல்லிகளாகத்தானே ஆண்கள் உள்ளனர். யாராவது பெண் ஜீன்ஸ் அணிந்தால் 'இனி நாங்கள் பாவாடைதான் கட்ட வேணும்' என சொல்லும் அறிவுக்கொழுந்துகளாகத்தானே பெருமளவு ஆண்கள் உள்ளனர். பெண்கள் தொடர்பான மிக அடிமட்ட பார்வை கொண்ட ஆண்களின் உலகத்தை பங்கிட வேண்டியிருப்பதுதான் பெண்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்.

சமூகத்தில், நிர்வாக அதிகாரத்தில் அதிகாரத்தில் உள்ள ஆண்களால் எல்லாச் சமயங்களிலும் பெண்களின் பிரச்சனைகளை புரிந்து கொள்ள முடிவதில்லை. கணவனை இழந்த பெண்ணொருத்தி குடும்பத்தை கரை சேர்க்க நிச்சயம் வருமானத்தை ஈட்டித்தான் ஆக வேண்டும். திக்குத்தெரியாத காட்டில் விடப்படுவதைப் போல திடீரென அவள் வீதிக்கு வரும்போது சமூகம் அவளை ஏளனமாகத்தான் பார்க்கிறது. அவளை வார்த்தைகளால் முடமாக்க எல்லாவிதமான முயற்சிகளும் செய்கிறது.

இந்தசமூகத்தின் எல்லாவிதமான கூறுகளும் பெண்களிற்கு சவாலாகவும், இருப்பை அச்சுறுத்துபவையாகவுமே உள்ளன. பெண் பிள்ளையாக பிறந்து, வீட்டின் சொற்படி நடந்து, பெற்றோர் பார்க்கும் மாப்பிள்ளையை மணந்து, கணவனிற்கு கீழ்ப்படிந்து நடக்கும் மனைவியாக வாழ்ந்து, பிள்ளைகளை பெற்று வளர்த்து, அவர்கள் பிள்ளைகளையும் சீராட்டி இறந்து போகும் ஒரு பெண்ணிற்கு இந்த உலகத்தில் சவால்கள் அதிகமிருப்பதில்லை. உண்மையை சொன்னால் எல்லாப்பெண்களிற்கும் உள்ள சவால்கள் அவர்களிற்கும் இருந்தாலும், தமக்கு முன்னுள்ள சவால்களை அவர்கள் கண்டு கொள்வதில்லை. அல்லது, 'ஒழுக்கவிதி'களிற்கு உட்பட்ட அவர்களை சீண்டாமல், மற்றவர்களையும் அப்படியே வாழ ஊக்குவிக்குவிக்கும் விதமான செயற்பாடுகளை சமூகம் நூதனமாக செயற்படுத்தும்.

இந்த சராசரி வரையறைகளை கடந்தால் பெண்களின் வாழ்வு தொடர் போராட்டம் நிறைந்ததாகி விடுகிறது. சமூகத்தின் ஒவ்வொரு கூறுகளுடனும் அவர்கள் தினம் தினம் போராட வேண்டியுள்ளது. ஆண்களின் பொழுது போக்கு எனப்படும் மது, புகைத்தல் தொடக்கம் யுத்தம் வரை அனைத்தின் விளைவுகளும் பெண்களின் தலைகளிலேயே விடிகிறது.

இலங்கை சனத்தொகையில் 53 வீதம் பெண்கள்தான். அத்துடன் அரசஉத்தியோகத்தில் இருப்பவர்களில் பெண்களின் வீதம் தான் அதிகம். ஆனால் அவர்கள் தனித்து செயற்பட முடியாமலும், சிறப்பாக செயற்பட முடியாமலும் ஆண்கள் திரைமறைவில் இடைஞ்சல் கொடுக்கிறார்கள் என்கிறார் வடமாகாண பெண்கள் அமைப்பின் தலைவி ஸ்ரீதரன் ஈஸ்வரி. எல்லா அரச அலுவலகங்களின் நிலையும் இதுதான் என்கிறார். எனினும், பிரதேச செயலகம், மாவட்ட செயலகங்களில் துல்லியமாக அவதானிக்கலாம் என்கிறார்.

"இன்று பெண் ADP ஒரு கருத்தை சொன்னால் DS அதை ஏற்றுக்கொள்வதென்பது நான் அறிய நடைமுறையில் இல்லை. ஒரு பெண் ADP என்ற கதிரையில் கட்கார்ந்திருக்கிறாரே தவிர, ஆண் என்றால் தன்னிலும் கீழுள்ள பதவியில் உள்ளவர்களை அனுசரிக்கிறார்கள்.

வடக்கு கிழக்கில் 83,000 விதவைகள் உள்ளனர். வாழ்வாதாரம் உள்ளிட்ட பல பிரச்சனைகளை சந்திக்கிறார்கள். அவர்களை வைத்து இந்த சமூகம் அரசியல் வியாபாரம்தான் செய்கிறார்கள்.

பெண்உரிமைக்காகவும், பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராகவும் குரல் கொடுக்கும் பெண்களும் மிகக்குறைவுதான். எந்தச்சந்தர்ப்பத்திலும் தனது உரிமைகளை கேட்டுப்பெறவும் பெண்கள் தயங்ககூடாது. அங்கீகாரத்தை பெற தொடர்ந்து போராட வேண்டும்" என்றார்.

ஒவ்வொரு கணத்திலும், சமூகத்தின் ஒவ்வொரு கூறுகளுடனும் தினம்தினம் போராடிக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணை அண்மையில் யாழ்ப்பாணத்தில் சந்தித்தேன். சித்ரா என்ற அந்தபெண் மூன்று பிள்ளைகளுடன் கடந்த பத்து வருடங்களில் கடந்து வந்த பாதை மிகச்சிரமமானது. யுத்தத்தை நடத்தியதும், தீர்மானித்ததும் ஆண்கள்தான் என்றபோதும் பெண்கள் அதற்காக கொடுத்த விலை யென்னவென்பதை சித்ராவின் கதை உணர்த்தும்.



யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகை ஒன்றில் வாகன சாரதியாக பணிபுரிந்தவர் பாஸ்கரன். 2006ம் ஆண்டு கெடுபிடி காலம். பத்திரிகை விநியோகவண்டியின் சாரதி அவர்தான். நீண்டசமாதானத்தின் பின்னர் மீண்டும் குழப்பங்கள் ஆரம்பித்த நாட்கள்.

ஒருநாள் காலையில் வழக்கம்போல பத்திரிகை வண்டியுடன் புறப்பட்டார். அன்றைய பத்திரிகையின் பிரதான செய்தி செஞ்சோலை சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டது. அந்த செய்தி வெளிவருவதை ஒருதரப்பு விரும்பியிருக்கவில்லை. அதற்கு சாட்சி பாஸ்கரனிற்கு நடந்த கதி.



ஸ்ரீதரன் ஈஸ்வரி

அச்சுவேலி இராணுவமுகாமில் வாகனம் மறிக்கப்பட்டது. அடையாள அட்டை சோதனை செய்யப்பட்டு பத்திரிகை வாகனம் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டது. சிறிதுதூரம்தான் பாஸ்கரன் சென்றிருப்பார். மோட்டார்சைக்கிளில் வந்த இரண்டுபேர் வாகனத்தை மறித்தனர். பாஸ்கரன் சுதாகரிப்பதற்குள் அவரது நெற்றிப்பொட்டில் துப்பாக்கி சன்னங்கள் பாய்ந்தன.

பெரும்படுகொலை செய்தியுடன் வெளியான பத்திரிகையுடன் சென்றவரும் படுகொலையான வரலாறு பதிவானது. மூளை சிதைவடைந்து மரணமடைந்தார் என்பது மரணச்சான்றிதழில் உள்ள குறிப்பு.

பாஸ்கரனின் மரணம் குடும்பத்தை குலைத்துப் போட்டது. நான்கு வயதில் ஒரு பெண்பிள்ளை. இரண்டு ஆண்பிள்ளைகள் பாடசாலை சென்று கொண்டிருந்தனர். வாழ்க்கையும் சமூகமும் சித்ராவை பிள்ளைகளுடன் அநாகதரவாக கைவிட்டது. பாஸ்கரனின் மரணச்சடங்கை அவர் பணிபுரிந்த நிறுவனம் பொறுப்பேற்றிருந்தாலும், அத்துடன் சித்ராவை அவர்களும் கைவிட்டுவிட்டனர் என்கிறார்.

மரணத்தின் வாசனை அடங்க முன்னரே நான்கு வயது பிள்ளைக்கு பால்மா வாங்க வேண்டும், மற்றைய பிள்ளைகளின் படிப்பு செலவை பார்க்க வேண்டும் என்ற வாழ்க்கை யதார்த்தம் அவரின் முன் விஸ்பரூபம் எடுத்திருந்தது.

கூட்டுறவு கடையில் அதிகாலையிலேயே வரிசையில் நின்று துண்டு எடுக்க வேண்டும். பொருள் தட்டுப்பாட்டுக் காலம். சித்ராவின் நெருக்கடியை ஊர் அறிந்திருந்தாலும், பசியென்றால் பத்தும் பறந்துவிடுமல்லவா?

கணவன் இறந்த சில நாட்களிலேயே நிவாரண வரிசையில் நின்றதுடன், கூலித் தொழிலும் ஈடுபட தொடங்கினார். அச்சுறுத்தல்களினால் வீட்டைவிட்டு இடம்மாறி வாழ வேண்டிய நெருக்கடிகளையெல்லாம் சந்தித்தார். அந்த நாட்களில் சித்ரா சாப்பிட்டதைவிட, சாப்பிடாமல் இருந்த நாட்கள்தான் அதிகம். என்றாலும், பிள்ளைகள் பட்டினியுடன் உறங்கவோ, கல்வியை இடைநிறுத்தவோ அனுமதிக்கவில்லை.

அந்த நெருக்கடியை சித்ரா இடைவிடாத போராட்டத்தின் மூலம் கடந்தார். சித்ராவின் முதல் மகன் வணிகப்பிரிவில் 3 ஏ பெற்று பல்கலைகழக அனுமதி பெற்றார். என்றாலும் வறுமை காரணமாக வேலைக்கு சென்றார். இரண்டாவது மகனும் பகுதிநேரமாக தொழில் செய்தபடி உயர்கல்வி கற்கிறார். நீண்டகாலமாக தொடர்பில்லாமல் இருந்த பத்திரிகை நிறுவனமும் கடந்த ஒருவருடமாக பிள்ளைகளின் கல்விக்கு உதவுவதாக சித்ரா குறிப்பிட்டார்.

இது தனியாக சித்ராவின் கதையல்ல. வடக்கு கிழக்கெங்கும் யுத்தம் பலிகொண்ட பல்லாயிரக்கணக்கானவர்களின் குடும்பங்களின் கதை. நடுவீதிகளில் வைத்து இப்படி கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களிற்கு நீதியென்பதே கிடைக்காதா? யார் இந்த கொலையாளிகள் என அடையாளமே காண முடியாதா?

இந்த யுத்த அரசியலில் சித்ரா சம்பந்தப்பட்டவராக இருந்ததில்லை. ஆனால் யுத்தத்தின் விளைவை அவர் எதிர்கொண்டார். அவரது நெருக்கடி சமயத்தில் இந்த சமூகம் அவருக்கு கைகொடுக்கவில்லை. பணம் திரட்ட ஆண்களிற்கு உள்ள வாய்ப்புக்கள் பெண்கள் எல்லோருக்கும் வாய்ப்பில்லாதபோது உலகம் பெண்களை மதிக்கிறதென எப்படி நம்பலாம்?

இன்னும் நீளும்



# குற்றங்களின் தலைநகராகும் வடக்கு

எஸ்.என்.நிக்ஷன்

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்ற குற்றச்செயல்களால் யுத்தகாலத்தில் ஏற்பட்ட அச்சமான நிலைமையொன்று மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்ற கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டுக்கள் மற்றும் ரவுடித்தனம் போன்ற சம்பவங்கள் பெரும் அச் சஉணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றன. யாழ் மாவட்ட அரசாங்க அதிபரே மக்கள் மாலை ஆறு மணிக்குப் பின்னர் வீடுகளை விட்டு வெளியேற முடியாததொரு சூழல் இருப்பதாக கூறியிருக்கிறார்.

ஆறு மணிக்கு முன்னர் வீடுகளுக்குள்ளே முடங்கினாலும் அங்கும் நிம்மதியாகத் தூங்க முடியாத அச்சநிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கஅதிபர் சுட்டிக்காட்டி இருப்பதானது குற்றச் செயல்கள் மாவட்டத்தில் எந்தளவு அதிகரித்து இருக்கின்றன, அதிகரித்த குற்றச் செயல்கள் மக்களை எந்தளவிற்கு மிகமோசமாகப் பாதித்துள்ளன என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக யாழில் அதிகரித்து வருகின்ற குற்றச் செயல்களில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அதிகளவில் ஈடுபட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றது. இதில் பொலிஸ் தரப்பு மற்றும் அரசதரப்புக்களால் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றபோதும் இவற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எதேனும் எடுக்கப்படாமையே இந்தக் குற்றச் செயல்கள் மிகமோசமாக அதிகரித்து இருப்பதற்கு மிகமுக்கியமான காரணங்களாக இருக்கின்றது.

கடந்தகாலங்களில் இடமபெற்ற சிறுசிறு கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்களிற்கு எதிரான மிகதீவிரமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டிருந்தால் இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்ந்து அதிகரிப்பதை தடுத்திருக்கமுடியும். பொலிஸார் மற்றும் சம்மந்தப்பட்ட தரப்புக்கள் தொடர்ந்தும் இவ்வாறான செயல்கள் தொடர்பில் அசமந்தப் போக்கை கடைப்பிடித்து வருவதே இவ்வாறான குற்றச்செயல்கள் மீண்டும் மீண்டும் அதிகரித்து வருவதற்கு மிக முக்கிய காரணங்களாக அமைகின்றது.

இன்றைய யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால் கொலை, கொள்ளை போன்ற குற்றங்களுக்கு அடுத்ததாக பாலியல் துஸ்பிரயோகங்கள் மற்றும் போதைப் பொருட்கள் கடத்தல்கள் மிகமுக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இவ்வாறான குற்றங்களுடன் தொடர்புடைய பெரும்பாலானவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதே உண்மையானதொரு விடயமாக இருக்கின்றது.

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு கடத்தி வரப்படுகின்ற கஞ்சாவில் சிறிய வீதமே பொலிஸாரிடம் சிக்குவதாகவும் கூறப்படுகிறது. ஆனாலும் இவ்வாறு சிக்குகின்ற எந்தவிதமான சம்பவங்களிலும் போதைப் பொருட்கள் கடத்துகின்றவர்கள் தொடர்புபடாது போதைப் பொருட்கள் மட்டும் மீட்கப்படுவது தான் தொடர்ச்சியாக நடந்து வருகிறது.

போதைப் பொருட்கள் சிக்குகின்றபோது கடத்தல்காரர்கள் சிக்காமல் இருப்பது எவ்வாறு என்ற சந்தேகங்கள் பரவலாக எழுப்பப்பட்டே வருகின்றன.

இதனைவிட யாழ்ப்பாணத்தில் கடந்த காலாண்டில் மட்டும் சுமார் நானூறிற்கும் அதிகமான சிறுகுற்றங்கள் பதிவாகியுள்ளதாக யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பெரேரா அண்மையில் யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தின்போது சுட்டிக் காட்டியிருந்தார்.

இதனைவிட யாழ்ப்பாணத்திலே இரண்டு நாட்களுக்கு ஒருமுறை ஒருசிறுமி என்ற அடிப்படையில்பாலியல் துஷ்பிரயோகத்திற் குட்படுத்தப்பட்டு வருகின்றதாகவும் அவர் புள்ளிவிபரங்களுடன் தெரிவித்திருந்தார். ஆகவே பொலிஸ் தரப்பினரும் அரச தரப்பினரும் இவ்வாறான குற்றங்கள் அதிகரித்து இருப்பதனை ஏற்றுக் கொண்டிருக்கின்ற அதேவேளை இத்தகைய குற்றஞ்களைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பது ஏன் என்ற கேள்வி மக்கள் மத்தியில் பெருமளவில் எழுப்பப்பட்டிருக்கின்றது.

அண்மையில் வாள்கள், கத்திகள், இரும்புக் கம்பிகள் மற்றும் கூரிய ஆயுதங்கள் என்பனவற்றுடன் ஏழு பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். பொலிஸார் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு இத்தகை குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முன்வரும் போதுதான் இவ்வாறான குற்றச் செயல்களை தொடர்ந்தும் கட்டுப்படுத்தமுடியும். கைது செய்யப்பட்ட ஏழு பேரும் இளைஞர்கள் என்று பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவர்களில் பலர் மாணவர்களாக இருப்பதாகவும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன. ஆகவே பாடசாலை மட்டங்களிலிருந்து அல்லது சமூக,கிராமிய மட்டங்களிலிருந்து குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் மாத்திரமே எதிர்காலத்தில் இத்தகைய குற்றச் செயல்கள் தொடர்ந்து அதிகரித்துச் செல்லாமல் கட்டுப்படுத்த முடியும். குற்றச் செயல்களைத் தடுக்கின்ற பொலிஸார் இவ்வாறான செயற்பாடுகளில் அதிகளவில் ஈடுபடல் வேண்டும்.

குற்றச் செயல்கள் இடம்பெற்ற பின்னர் அதனைக் கட்டுப்படுத்துவது அல்லது அது தொடர்பிலே விபரிப்பதை விடுத்து குற்றச் செயல்கள் இடம்பெறுவதனைத் தடுக்கும் நோக்கில் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பது பெரும் முக்கியமான பொறுப்புக்களில் ஒன்றாக இருக்கின்றது.

இந்த விடயங்களிலே சமூகம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இங்கு இடம்பெற்றுவருகின்ற தொடர் குற்றச் செயல்களில் நாங்கள் வெறுமனே பொலிஸ் தரப்பை மட்டும் குற்றஞ்சாட்டிக் கொண்டு ஒதுங்கியிருந்து விடமுடியாது. இதற்கான பொறுப்பை எங்களுடைய அரசியல்வாதிகளும் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் வளர்ந்து வருகின்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு தனியே பொலிஸாருக்கு மட்டுமன்றி பாடசாலை மட்டத்திலிருக்கின்ற ஒவ்வொருவருக்கும், சமூகத்திலிருக்கின்ற ஒவ்வொருவரதும் கடமையாக இருக்கின்றது. குறிப்பாக பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தாமையே இன்றைக்கு பிள்ளைகள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு மிக முக்கிய காரணங்களாகவும் இருக்கின்றது.

பாடசாலைக்கு செல்லும் பிள்ளை அங்கே எவ்வாறு செயற்படுகின்றார். எவ்வாறானவர்களுடன் உறவு வைத்திருக்கின்றார். அவர் என்ன செய்கின்றார். என்பது போன்றவற்றைக் கூட கவனிக்க முடியாதிருக்கின்ற பொற்றோரும் இதற்கு முக்கியகாரணிகளாக இருக்கின்றனர். இதனைவிட இன்றைக்கு தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட வடக்குமாகாணசபையும் அதனுடைய அரசியல்வாதிகளும் இவ்வாறான குற்றஞ்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய உருப்படியான எந்தவிதமான சிறுமுயற்சியையும் கூட எடுக்கவில்லை என்பதே வெளிப்படையான உண்மையாக இருக்கின்றது.

ஆகவே குற்றச் செயல்கள் இடம்பெற்ற பின்னர் அதனை அனைவரும் விமர்சித்துக் கொண்டிருப்பதனைவிட எதிர்காலத்தில் இவ்வாறான குற்றங்கள் இடம் பொறத வகையில் அவற்றைத் தடுக்கும் நோக்கில் ஆரம்பகட்டத்திலிருந்து விழிப்புணர்வுகளை முன்னெடுக்க வேண்டியது பொலிஸார் மட்டுமின்றி எமது அரசியல்வாதிகள் மற்றும் சாதாரணமக்கள் என அனைவரதும் கடமையாக இருக்கின்றது. இவ்வாறான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை நாங்கள் விரைவாகவே ஆரம்பிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அவ்வாறு இத்தகைய செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்கும் பட்சத்திலே எதிர்காலத்தில் இவ்வாறான குற்றங்களைக் மட்டுப்படுத்தி குற்றங்களற்ற சமூகமாக நம்மை மாற்றிக்கொள்ள முடியும்.



# கோடையிலும் கூலாகலாம்

திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com





## அழகின் இரகசியம் 16

கோடையிலும் கூலாகலாம்

**சருமத்திற்கு**

பொதுவாக எண்ணெய் கொழுப்பு அதிகம் கலந்த சோப்பை உபயோகிப்பதை தவிர்க்கவும். ph balance உள்ள சோப் உபயோகிக் கலாம். கடலை மாவும் பயற்றம் மாவும் எந்த வித தொந்தரவும் கொடுக்காதவை. அவற்றைத் தினமும் குளிக்கும் போது உபயோகப்படுத்தலாம்.

**வியர்வை நாற்றம்**

வேப்பிலையைக் குளிக்கும் நீரில் போட்டு அந்த நீரில் குளித்தால் வியர்வையால் ஏற்படும் கெட்ட நாற்றம் போகும்.

ஒரு வாளி நீரில் கற்பூரத்தூள் ஒரு சிட்டிகை போட்டுக் குளிக்கலாம். இதனால் சருமத் துவாரங்கள் திறந்து தோல் நன்கு சுவாசிக்க வழி வகுக்கும்.

டீ சாயம் (ஹேபல் டீ தற்பொழுது சிறிய பக்கெட்டுக்களிலும் வருகின்றது. அதை ஒரு பக்கெட்டிற்கு 2 கப் நீரில் கொதிக்க வைத்து ஆற வைக்கவும்,) எடுத்து அந்த நீரில் முகம் கழுவினால் கோடையில் சருமத்தில் ஏற்படும் எரிச்சல் குறையும்.

வெயிலில் அலையும் பொழுது உடல் அதிகமாகக் கறுத்து விடும். இதற்கு பாலில் குங்குமப் பூவை ஊற வைத்து அதைப் பூசலாம்.

வெள்ளைக் கொண்டைக் கடலை மா பட்டாணி மா சம அளவு எடுத்துக் கொண்டு இவற்றுடன் ஒரு டீ ஸ்பூன் இளநீரும் தேங்காய்ப் பாலும் சேர்த்து ஊற வைத்து முகம் கழுவினால் சருமம் மென்மையாகும். கறுப்பாக இருப்பவர்கள் நல்ல நிறமாகலாம்.

முல்தானி மெட்டி பௌடர் ஒரு டிஸ்பூனுடன் இரு டிஸ்பூன் டீ சாயத்தைச் சேர்த்து முகத்தில் அரை மணி நேரம் ஊற வைத்து கழுவவும். வெயிலில் செல்வதற்கு முன்னும் பின்னும் இதை உபயோகிக் கலாம்.

அதிகமான வியர்வையால் கையின் அடியிலும் கல்களின் இடுக்குகளிலும் அரிப்பு ஏற்பட ஆரம்பிக்கும். இதனால் தோல் பாதிப்படையும். உடலிலுள்ள உப்பை வெளியேற்ற அதிக அளவு நீர் அருந்த வேண்டும். உடலைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

90வீதம் நலம் நாம் சாப்பிடும் உணவிலும் வாழும் வாழ்க்கை முறையிலும் தான் அடங்கியிருக்கின்றது. பிறகென்ன கோடையிலும் மட்டுமல்லவாழ்நாள் முழுவதுமே அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கலாம்.

**வேர்குரு வராமலிருக்க**

15 டிஸ்பூன் திரிபலா பொடியில் தண்ணீர் சேர்த்து உடலில் வேர்க்குரு உள்ள இடங்களில் தடவி வந்தால் வேர்க்குரு மறையும்.

உலர்ந்த ஒரேஞ் - 2 டிஸ்பூன், பழத்தோல் தூள் - சிறிது, சந்தனத் தூள் - 1 டிஸ்பூன், வெட்டிவேர் பவுடர் - சிறிது, பன்னீர் - சிறிது

இவை கலந்து ஒரு நாளைக்கு இரு முறை பூசி குளிர்ந்த நீரில் கழுவலாம்.

# உங்கள் சமயலறையில்



சமையலறையில் வசந்த காலத்தை வரவேற்கும் அலங்காரத்தை எளிமையாகச் செய்யமுடியும். சமையலறையின் சுவர்கள், திரைச்சீலைகள், மேசைகள் என எல்லா வற்றிலும் வசந்த காலத்தின் வசந்தத்தை மிளிர வைக்க முடியும். சமையலறையில் வசந்த காலத்தை வரவைப்பதற்கான சில வழிகள்...

**பூக்கள் பிடிக்குமா?**

பூக்களைக் கருப்பொருளாக வைத்து அலங்கரிப்பது பிடிக்குமென்றால், அதை வரவேற்பறை மட்டுமல்லாமல் சமையலறை யிலும் தொடரலாம். சமையலறைச் சுவர் களில் வண்ணமயமான பூக்களை வால்பேப்பராக ஓட்டிவைக்கலாம்.

அப்படியில்லாவிட்டால், சுவர்களில் பூக்களைப் புடைப்புச் சிற்பங்களாகவும் படைக்கலாம். இவை எல்லாவற்றையும்விட எளிமையானது சமையலறைக்குள் பூச்சாடி களை அமைப்பது. இந்தப் பூச்சாடிகள் சமைய லறைக்குப் புதுப் பொலிவைக் கொடுக்கும்.

**அடுப்படியிலும் பூக்கள்**

அடுப்படி மேசைக்குப் பின்னால் இருக்கும் சுவர்களில் முழுமையாகப் பூக்கள் நிறைந்த பேக்ஸ்ப்லாஷை வைத்து வடிவமைக் கலாம். இதனால் அடுப்படிச் சுவர்கள் பாதிப்படைவதைத் தவிர்க்கலாம். இந்தப் பேக்ஸ்ப்லாஷை சுத்தப்படுத்துவதும் எளிமை யானது.

இந்த அலங்காரத்தைச் செய்த பிறகு, சமையலறைக்குள் ஒரு பூக்கள் கூட்டம் நுழைந்துவிட்டதுபோல் இருக்கும். இந்தப் பேக்ஸ்ப்லாஷை கண்ணாடியிலும் உருவாக் கலாம். இது கூடுதல் வசீகரத்தைச் சமைய லறைக்குக் கொடுக்கும். நீல, மஞ்சள் பூக்களைக் கொண்டு இந்தப் பேக்ஸ்ப்லாஷை அமைக்கலாம்.

**மலரவைக்கும் திரைச்சீலைகள்**

உங்கள் சமையலறை திரைச்சீலைகள் போடுவதற்கு வசதி இருக்கும்படி அமைந் திருந்தால் மலர்களான திரைச்சீலைகளைப் போடலாம். இது சமையலறைக்குள் உண்மை யான வசந்தம் வந்துவிட்டதைப் போன்ற தோற்றத்தைக் கொடுக்கும். ஆனால், லேசான வெளிச்சத்தைச் சமையலறைக்குள் கொண்டுவரும் பருத்தி திரைச்சீலைகளைத் தேர்ந்தெடுக்கவேண்டியது அவசியம்.

**பூக்களால் ஒரு புடைப்புச் சிற்பம்**

வீட்டுக்குள் புடைப்புச் சிற்பங்களை அமைப்பது இப்போது புதிய டிரண்ட். இந்தப் புடைப்புச் சிற்பங்களைச் சமையலறையிலும் அமைக்கலாம். இரண்டு கான்ட்ராஸ்ட் வண்ணங்களில் பெரிய பூக்களாலான புடைப்புச் சிற்பத்தை அமைக்கலாம். இது சமையலறைக்குள் நுழைந்ததும் புத்துணர்ச் சியை அளிக்கும்.

**வித்தியாசமே அழகு**

எதிர்பார்க்காத வகையில் அலங்கரிப்பதும், வடிவமைப்பதும் ஒரு கலைதான். அப்படியும் சமையலறைக்குள் வசந்தத்தைக் கொண்டுவர முடியும். சமையலறை சுவர்களை அடர்நிறங் களால் மட்டுமே அலங்கரிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அதற்கு மாறாக, சாம்பல் நிறத்தின் பின்னணியில் வெள்ளை பூக்கள் இருக்குமாறும் வடிவமைக்கலாம். இது ஒரு வித்தியாசமான அழகைச் சமையலறைக்குக் கொடுக்கும்.

**பொருட்களாலும் அலங்கரிக்கலாம்**

வரவேற்பறையைப் பல்வேறு பொருட் களை வைத்து அலங்கரிப்பதுபோலச் சமைய லறையையும் அலங்கரிக்கலாம். படங்கள், அலங்காரமான கண்ணாடிகள், அலங்கார விளக்குகள் என எல்லாவற்றையும் சமைய லறைக்கும் கொண்டுவரலாம். இது சமைய லறைக்குப் பிரம்மாண்டமான தோற்றத்தைக் கொடுக்கும்.

**துணியாலும் அலங்கரிக்கலாம்**

சமையலறையில் இருக்கும் மேசைத் துணியையும் நீங்கள் வசந்த காலத்தைப் பிரதிபலிப்பதுபோல் அமைக்கலாம். சமைய லறைக்குள் பூக்களைக் கொண்டுவருவதற்கு இது ஒரு சிறந்த வழி. இந்த மேசை விரிப்பை நீங்களே வடிவமைக்கலாம். மேசை விரிப்பில் நீலம், சிவப்பு, மஞ்சள் நிறப் பூக்கள் இருப்பது நல்லது.

**தட்டுகளும் உதவும்**

பழமையைப் பிரதிபலிக்கும் பூக்களா லான தட்டுகளை வைத்தும் சமையல றையை அலங்கரிக்கலாம். இந்தத் தட்டுகளை யெல்லாம் சேகரித்துச் சமையலைச் சுவரில் ஒட்டிவைக்கலாம். இது சமையலறைக்குப் புதுமையான வசந்த காலத் தோற்றத்தைக் கொடுக்கும்.

# பெண்களுக்கான கருத்தடை சத்திரசிகிச்சை

வைத்திய கலாநிதி
ம.தக்ஷாயினி
உதவி சுகாதார வைத்திய அதிகாரி
சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனை - நல்லூர்

தங்கள் குடும்பத்தை பூர்த்தி செய்து கொண்ட குடும்பத்தினர் செய்து கொள்ள கூடிய ஒரு நிரந்தரமான கருத்தடை முறை இதுவாகும். இது மிகவும் நம்பகரமான பாதுகாப்பான முறையாகும். இந்த சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படபவர்கள் மீண்டும் கருத்தரித்தல் என்பது இயலாத கடினமான ஒன்றாகும். எனவே இனி குழந்தைகள் தேவையில்லை என தீர்மானம் எடுத்த தம்பதியினர் எழுத்து மூலம் சம்மதம் கொடுத்த பின்னரே இச் சத்திர சிகிச்சை செய்து கொள்ள முடியும்.

1586ம் ஆண்டு அரச சுற்று நிருபத்தின் படி நிரந்தர கருத்தடை முறையை பெற்று கொள்ள தகுதியானவர்கள் யாரெனில்

1 மூன்று பிள்ளைகள் கொண்ட குடும்பமொன்றில் இனி குழந்தைகள் தேவையில்லை என்று தீர்மானிக்கும் தம்பதியினர்.
2 இரண்டு குழந்தைகள் மட்டுஆம உள்ள குடும்பத்தில் தாயின் வயது 26 அல்லது அதற்கு மேலும் கடைசி பிள்ளையின் வயது இரண்டிற்கு மேல் இருப்பினும் மட்டும் இச் சிகிச்சை முறையை தேர்வு செய்ய முடியும்.



இச் சத்திர சிகிச்சையை பெற்று கொள்ளவிருக்கும் பெண்ணிற்கு பொதுவாக குழந்தைப் பேறு அல்லது கருச்சிதைவை அடுத்து உடனடியாகவும் அல்லது குழந்தை பேற்றிலிருந்து ஆறவாரங்களின் பின்னரும் மேற்கொள்ளப் படுகின்றது.

LRT என்று ஆங்கிலத்தில் கூறப்படும் இச் சத்திர சிகிச்சையின் போது இருப்பிற்கு கீழான பகுதிக்கு மயக்க மருந்து கொடத்து விறைப்படைய செய்த பின்னர். அடி வயிற்றின் மீது இடப்படும் ஒரு சிறியவற்றினூடாக இரண்டு பலோப்பியன் குழாய்கள் கட்டப்பட்டு சிறிய துண்டொன்று வெட்டியகற்றப்படுகின்றது. மிக மிக அரிதாக மீண்டும் கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்பு (அதாவது ஆயிரம் நிரந்தர கருத்தடை செய்து கொண்ட பெண்களில் 5 பேரிற்கு மீண்டும் கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்புள்ளது) வாய்ப்புள்ளதாக கூறப்பட்டாலும் இது பொதுவாக 100% வினைத்திறன் மிக்க கருத்தடை முறையாகவே கருதப்படு கின்றது.

இச் சத்திர சிகிச்சைக்காக நீங்கள் ஒரு நாள் மட்டுமே வைத்தியசாலையில் தங்கியிருக்க நேருடுகின்றது. இந்த சத்திரசிகிச்சை முடிந்து சில நாட்களில் பெண் தனது நாளாந்த வேலைகளில் ஈடுபட்டு கொள்ளலாம். மிக அரிதாகவே வைத்திய கவனிப்பு தேவைப் படும் அளவிற்கு சிக்கல்கள் ஏற்படுகின்றது.

சத்திர சிகிச்சையின் போது தையல் இடுவதற்கு பயன்படுத்தப்பட்ட இழையின் தன்மையை பொறுத்து இழைகளை வெட்டு வதற்காக 56 நாட்களில் வைத்தியசாலைக்கு (இழை வெட்ட) அழைக்கப்படுகின்றார்கள். இழை வெட்ட வேண்டுமா அல்லது இல்லையா என்பது பற்றி வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையின் பின் அறிவுறுத்தபடும்.

இதனை விட பொது சுகாதார உத்தியோகஸ்தர் (public heath mid wife) ஆக குறைந்தது 3 மாதங்களிற்கேனும் வீட்டு தரிசிப்பு செய்வர்இத் திரசிப்பின் போது ஏதாவது பிரச்சினைகள் உண்டாவென அறிந்து வைத்திய கவனிப்பிற்காக அனுப்பி வைப்பர். பிரச்சினைகள் இல்லாதவிடத்து 3மாதம் நிறைவேறிய பின்னர் 56 மாதத்திற்கு ஒரு முறை வீட்டு தரிசிப்பு செய்வர்.

சத்திர சிகிச்சைக்கு ஆயத்தமாக போகும் பெண்களுக்கு பொதுவாக பல வினாக்கள் மனதில் எழக் கூடும். உதாரணமாக இவ்வாறு கருத்தடை சத்திரசிகிச்சை செய்து கொண்ட பின்னர் உடற் பருமன் கூடுமா? அடுத்து மாத சுகயீனத்தில் மாற்றம் ஏற்படுமா? அல்லது மாத சுகயீனம் நிறுத்தப்படுமா? பெண்கள் நிரந்தர கருத்தடை மேற்கொள்வதனால் அவர்களது பாலியல் ஈடுபாடுகள் குறைவடையுமா? என்கின்ற வினாவுடன் கூடிய பயம் மனதில் எழக் கூடும். இவ்வாறான வினாக்களுக்கான விடை இல்லை என்பதாகும்.

உடற்பருமனில் சத்திரசிகிச்சைக்கு பின் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவதில்லை. பல மருத்துவ ஆய்வுகளின் படி நிரந்தர குறிப்பாக கருத்தடையின் பின் மாத சுகயீனத்தில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. எனினும் நிரந்தர கருத்தடை செய்ய முன் ஏதாவது கருத்தடை முறைகளை பாவித்தி ருப்பின் அதனுடைய செல்வாக்கினால் அல்லது தாக்கத்தினால் மாத சுகயீனத்தில் மாற்றமிருக்கலாம். நிரந்தர கருத்தடைக்கு பின் முன்னர் போன்று பாலியல் உறவுகளை மேற்கொள்ள முடியும்.

நிரந்தர கருத்தடை செய்த கொண்ட ஒரு பெண் மீண்டும் ஏதாவதொரு சந்தர்ப்பங் களினால் கருத்தரிக்க விரும்பினால் கருத்தரிக் கலாமா? என்கின்ற கேள்வியும் பலர் மனதில் எழக்கூடும். இதற்கு பொதுவாக இல்லை என்றே கூற வேண்டும். ஏனெனில் இது ஒரு நிரந்தரமான கருத்தடை முறையாகும். கருத்தடை செய்த ஒரு சில பெண்கள் மட்டுமே அறுவை சிகிச்சை மூலம் மீண்டும் பலோப்பியன் குழாயை ஒன்றிணைக்க கூடியதாக இருக்கும். ஆயினும் அவர்கள் மீண்டும் கருத்தரித்தல் என்பது கடினமான விடயமாகும். இம் முறை செலவு கூடியதும் கடினமானதாகும்.



# காதணியும் பெண்களும்

சில பெண்கள் அழகான உடை உடுத்தி இருப்பார்கள். அருகில் இருப்பவர்களுக் குத் தான் தெரியும், அவர்களின் காதுகள் சுத்த மில்லாமல் இருப்பது. தினமும் காதுகளை தேய்த்து சுத்தப்படுத்துங்கள். காது அமைப்பில் வித்தியாசம் இருக்கலாம். அதை காதணிகள், மேக்கப்பினால் சரி செய்து கொள்ளலாம்.

நீளக் காது என்றால் ஃபவுண்டேஷன் போட்டு சிறிதாக காட்டலாம். வித விதமான காதணிகளால் அலங்கரிக்கலாம்.

காதின் கீழ் விளிம்பு அகலமாக இருந்தால் பட்டையாக நிறைய கல் வைத்த தோடுகளை போட்டுக் கொள்ளுங்கள்.


சின்ன காது என்றால் காது மடல்களில் 2, 3 துளை போட்டு சின்னச் சின்ன வளை யங்களை மாட்டி, காது விளிம்பில் கல் பதித்த சரம் போன்ற தோடு அல்லது தொங்கட்டான் போடலாம். குண்டு முத்துக்கு தொங்கட்டான் வேண்டாம். காதோடு ஒட்டின டிசைன் தோடு எடுப்பாக இருக்கும்.

கழுத்தில் மெலிதான செயின் என்றால் காதணியை சற்று பெரிதாக அணிந்து கொள்ளுங்கள். காதோரம் குட்டிக் குட் டித் தோடுகள் அழகாக இருக்கும்.


அகலமான முகம் உள்ளவர்கள் நீள தொங்கட்டான்கள், ஒன்றின் கீழ் ஒன்று வரும் குடை ஜிமிக்கிகள், பெரிய வளையங்கள் போடலாம். கழுத்து நீளம் குறை வென்றால் காதணி நீளத்தை குறைக்கவும்.

காது மடல்களில் அணியும் தோடுகள், குட்டி தொங்கட்டான்கள், வளையங்கள் முக அழகை கூட்டும்.

விழாக்களுக்கு செல்லும் போது அகலமான மாட்டல், கல் வைத்த குண்டு ஜிமிக்கி, பட்டை நெக்லஸ் போட்டுக் கொண்டு பட்டையை கிளப்புங்க.



# கட்டில் கண்காணிப்பு!




இது கொஞ்சம் விவகாரமான செய்திதான். இந்த விவகாரத்தால்தான் பல தம்பதிகள் விவகாரத்து வரை செல்கின்றன. இப்பிடியான சிக்கல்களை தீர்த்து வைக்க புதிதாக சந்தைக்கு வருகின்றது 'ஸ்மார்ட்ரெஸ் Smarttres' என்றழைக்கப்படும் நவீன தொழில்நுட்பங் களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள விவகாரமான மெத்தை.ஸ்பெயின் நாட்டில்இது தயாரிக்கப்பட்டுள்ளது.

அம்மெத்தையில் யாராவது உடலுறவு வைத்துக் கொண்டால் உடனடியாக அதன் உரிமையாளருக்கு செயலி மூலமாக, மெத்தைப் பயன்படுத்தப்பட்ட நேரம், அதிர்வு, அழுத்தம் மற்றும் வேகத்தின் அளவு என புள்ளிவிவரங்களோடு முழு நீள அறிக்கை சென்றுவிடும்.

இதன் இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், அதிர்வு, அழுத்தம் மற்றும் வேகத்தின் அளவை வைத்து, உண்மையில் அம்மெத்தையில் இன்னது தான் நடந்துள்ளது என்பதை ஊகித்து அதற்கு ஏற்ப "இது நடந்திருக்கலாம்" என்று சம்பந்தப்பட்டவருக்குப் பரிந்துரைத்துவிடும் ஆற்றல் கொண்டது.

உதாரணமாக, அம்மெத்தையில் யாரேனும் நன்றாக உறங்கினால் அதன் அதிர்வை வைத்து அது 'உறக்கம்' என்றும், வீட்டில் உள்ள வளர்ப்புப் பிராணிகள் அதில் ஏறி குதித்தால் அதன் அளவீடுகளின் அடிப்படையிலும் அதை 'வளர்ப்புப் பிராணிகள்' என்றும் வகைப்படுத்திவிடும்.

அதேவேளையில், உடலுறவு போன்ற மற்ற விவகாரங் களினால் ஏற்படும் அதிர்வுகளின் அளவீடுகளும் அம்மெத்தையில் (Program) செய்து வைக்கப்பட்டிருப் பதால், உடனடியாக சம்பந்தப்பட்டவருக்குத் தகவலைப் பரப்பிவிடும்.

இந்த மெத்தையின் விலை 1,200 யூரோ.


# பேஸ்புக் பணப்பரிமாற்றம்

பேஸ்புக் வலைத்தளம் புதிய வசதி ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது. பேஸ்புக் வலைத்தளம் தனது மெசஞ்சர் அப் வழியாக செல்பேசியில் பணப் பரிமாற்ற சேவையை வழங்க முடிவு செய்துள்ளது.

பணம் பரிமாற்றம் செய்யப்படும் இரு நபர்களிடமும் கடன் அட்டை (டெபிட் கார்டு) இருந்தாலே போதுமானது. எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாக இந்த சேவையை வழங்குகிறது பேஸ்புக்.

தற்போது அமெரிக்காவில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வரும் இந்த வசதி விரைவில் மற்ற நாடுகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அன்ட்ரோய்ட் மொபைலில் இந்த வசதியை பயன்படுத்த முதலில் நாம் நமது டெபிட் கார்டு பற்றிய தகவல்களை பேஸ்புக் மெசஞ்சர் அப்பில் சேர்க்க வேண்டும்.

பணத்தை பிறருக்கு அனுப்பவும், பெறவும் 'பேபால்' என்ற டிரான்ஸ்பர் வசதியை போன்றே இதிலும் தரப்பட்டுள்ளது. பயனாளர்களின் டெபிட் கார்டு பற்றி விவரங்களை பாதுகாப்பதற்காக 'பின் பேஸ்ட் பாஸ்வேர்ட்' பாதுகாப்பும் தரப்பட்டுள்ளது.




தீபத்தின் இந்த மாபெரும் பரிசுத்திட்டத்தில் சரியான விடையெழுதி வெற்றியாளர் ஆகும் வாய்ப்பை இன்றே உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

தீபத்தின் பரிசு மழை

கேள்வி

அமெரிக்காவின் தேசிய விளையாட்டு எது?

பதில் : ....................

பெயர் : ....................

முகவரி : ....................

தொ.பே : ....................

இந்த கூப்பனை வெட்டி நிரப்பி எமது அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நிரப்பப்பட்ட கூப்பனை புகைப்படம் எடுத்து facebook/DeepamNews என்ற முகபுத்தகத்தினூடாக எமக்கு அனுப்பவும்.

வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

05 முடிவு திகதி : 05.05.2016

இல. 211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 6633



பரந்தன் கோரக்கன்கட்டு 2ம் கட்டை ஊற்று விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா அண்மையில் நடந்தது.

தீபத்தின் பரிசு மழை

சென்ற வார வெற்றியாளர்கள்

க. வர்ஷனா

344/7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ற. சஞ்சய்

கோப்பாய் தெற்கு, கட்டபிராய்.

கேள்வி

பஞ்சதந்திர கதைகளை எழுதியவர் யார்?

பதில்

விஷ்ணு சர்மா



# ஐ.பி.எல். மெழுகுவர்த்தியான சக்கரவர்த்திகள்

அன்ரூ இன்னேஷ்

மொத்த கிரிக்கெட் ரசிகர்களையும் கட்டிப்போட்டு வைத்திருக்கிறது ஐ.பி.எல். உலகத்தின் மிரட்டல் வீரர்கள் பலரையும் விலைபேசி விளையாட வைத்துள்ள ஐபிஎல்தொடரில்நட்சத்திரங்கள் எப்படி ஜொலிக்கின்றன?

உலக லெவன் அணியில் இடம்பிடிக்கும் வீரர்கள் எல்லோரையும் கூட்டியள்ளிக் கொண்டு வந்து ஐபிஎல் அரங்கத்திற்குள் ஒவ்வொருமுறை களமிறக்கினாலும், சறுக்கல்கள் சர்வசாதாரணம். 'உலக லெவன் வீரர்களாக இருப்பார்கள், உள்ளூர் உப்புமாவை போல சொதப்புவார்கள்' என்பது ஐபிஎல் வந்தபின் உருவான கிரிக் வசனம்.

அனல் பறக்கும் ஆட்டக்காரர்கள் பலரும் ஐபிஎல்லில் புஸ்வாணமாக போவது ஒவ்வொரு தொடரிலும் நடப்பதுதான். இந்த தொடரின் லீக் ஆட்டங்கள் இன்னும் முடியவில்லை. இதுவரையான ஆட்டங்களில் உப்புமா ஆன வீரர்கள் யார் என்ற பட்டியல் இது. பெருந்தொகை பணம் கொடுத்து வாங்கப்பட்ட வீரர்களில் யாரெல்லாம் சொதப்பி, ரசிகர்களினதும், அணி நிர்வாகத்தினதும் வயிற்றெரிச்சலை வாங்கிக் கட்டினார்கள் என்பதை பார்ப்போமா.

### ரவிச்சந்திரன் அஸ்வின்



ஏனோ தானோ போட்டிகளில் விக்கெட் வீழ்த்துவதும் உலகக்கிண்ணம் மாதிரியான முக்கிய போட்டிகளில் தத்தளிப்பதும் அஸ்வினின் பெரிய பலவீனம். கடந்த உலககிண்ண போட்டிகள் அதற்கு சாட்சி.

உள்ளூர் மைதானங்கள் என்றால் அஸ்வினிற்கு அல்வா சாப்பிடுவது மாதிரி என்ற அபிப்பிராயம் இருந்தது. ஆனால் இந்த ஐபிஎல் அதனை தவிடுபொடியாக்கிவிட்டது. இந்த ஐபிஎல்லில் அதிக ஏமாற்றம் கொடுத்த வீரர் அஸ்வின்தான்.

இந்திய அணி அண்மையில் விளையாடிய சில போட்டிகளில் அஸ்வினின் முழு ஓவர்களையும் வீசி முடிக்க கப்டன் தோனி அனுமதிக்காதததன் காரணம் இரகசியமாக தொடர, ஐபிஎல்லிலும் அஸ்வின் பந்து பொறுக்குபவராக மட்டுமிருக்க வேண்டிய நிலை தொடர்ந்தது. எல்லா துடுப்பாட்டக்காரர்களும் அஸ்வினிற்கு காட்டு காட்டென காட்டுகிறார்கள். ஏற்கனவே நொந்து கெட்டுப் போயுள்ள தோனி அணி இதனால் தலையில் கைவைக்காத குறையாக இருக்கிறார்கள்.

இதுவரையான எந்தப் போட்டியிலும் எதிரணியை அச்சுறுத்தும், நிலைகுலைய வைக்கும் விதத்தில் அஸ்வினின் பந்துவீச்சு இருக்கவில்லையென்பது அவரது ரசிகர்களிற்கும் அணிக்கும் பெரிய ஏமாற்றமே.

### டேல் ஸ்ரெயின்




தென்னாபிரிக்காவின் மிரட்டல், உருட்டல் பந்து வீச்சாளர். இன்றைய திகதியில் உலகின் தலைசிறந்த அச்சுறுத்தும் பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இவருக்கும் இடமுண்டு. தென்னாபிரிக்கா அணி உலகின் நம்பர் வன் அணியாகியதில் டேல் ஸ்ரெயினுக்கும் இடமுண்டு. ஆனால் இந்த ஐபிஎல் தொடரில்? சன்ரைஸஸ் ஹைதராபாத் அணிக்காக ஆடும் ஸ்ரெயின் வயதான சிங்கமாகத்தான் தெரிகிறார். முளைத்து இரண்டு இலை விடாத உள்ளூர் வீரர்கள் எல்லாம் ஸ்ரெயினை பொளந்து கட்டுகிறார்கள்.

என்ன ஆச்சு ஸ்ரெயினுக்கு என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. லைன் அனட் லெந்த், யோர்க்கர், புல்டோஸ் என்ற அவரது எந்த அஸ்திரமும் ஐபிஎல் இல் எடுபடவில்லை. விளையாடிய போட்டிகளில் நன்றாக சாத்துப்படி வாங்கினார். இதனால் ஒரு சில போட்டிகளுடனேயே ஓரமாக உட்கார வைக்கப்பட்டார். அடுத்தடுத்த ஆட்டங்களில் அவர் அணியில் நீடிப்பாரா என்பதே இப்பொழுது சந்தேகம்தான்.

### ஸ்டீபன் ஸ்மித்

ரைசிங் புனே சுப்பஜெயின்ற்ஸ் அணி நம்பிக்கையுடன் வாங்கிய சகலதுறை வீரர். அண்மைய வருடங்களில் ஜொலிக்கும் உலகின் அசத்தலான அவுஸ்திரேலிய துடுப்பாட்டக்காரர். மூன்று வடிவ



கிரிக்கெட்டிலும் ஸ்பெசலிஸ்ட். அவரை பெவிலியன் அனுப்ப மந்திரவாதிகளின் துணையையாவது நாடலாமென்றுதான் எதிரணிகள் யோசிக்கும். சொல்லியடிக்கும் கில்லி. ஒவ்வொரு போட்டியில் களமிறங்கும் போது சொந்த ஓட்டக்கணக்கை நூறுநூறாக அதிகரித்துக் கொண்டே செல்லும் ரன் மெஷின்.

என்றாலும் ஐ.பி.எல் இல் இன்னும் ஸ்மித் சுறாவளி மிஸ்ஸிங் என்பதுதான் ரசிகர்களிற்கு கவலையளிக்கிறது. ஐ.பி.எல்இல் நடுவரிசையில் களமிறக்கப்படுவது ஸ்மித்தின் ஆட்டத்தை பாதித்துள்ளதா அல்லது போட்டியின் பின்பகுதியில் களமிறங்கும் நெருக்கடியா தெரியவில்லை இன்னும் இம்மை மறுமையில்லாத அதிரடியை காண்பிக்கவில்லை. சுமாரான இரண்டு மூன்று ஆட்டங்கள் ஆடியிருக்கிறாரே தவிர அவரது வழக்கமான ஆட்டம் இன்னும் வெளிப்படவில்லை. முட்டுச்சந்திற்குள் வடிவேலுவை வைத்து வில்லன்கள் அடித்து விளையாடுவதை போல புனே அணியை மற்ற அணிகள் நொருக்கி எடுத்துக் கொண்டிருப்பதற்கு முடிவு கட்ட வேண்டுமெனில் ஸ்மித் சன்னதங் கொள்ள வேண்டும்.

### டேவிட் மில்லர்

20 ஸ்பெசலிஸ்ற் என பெயரெடுத்த தென்னாபிரிக்காவின் இளம் வீரர். மில்லர் என்றால் அவரது மின்னலடிகள்தான்



கண்ணிற்குள் வரும். எதிர்முனையில் எந்தப்பந்துவீச்சாளர் என்றாலும் முகத்தில் எந்த ரியாக்சனும் இல்லாமல் பந்துகளை எல்லைக்கு வெளியில் விரட்டிக் கொண்டிருக்கும் மில்லரை இந்த ஐ.பி.எல் சீசனில் காணவே முடியவில்லை.


நேற்றுத்தான் துடுப்பை கையில் எடுத்த வீரர் களத்தின் மலங்க மலங்க முழிப்பதை போல மில்லர் நிற்பதுதான் சகிக்க முடியாத காட்சி. கடந்த ஆட்டங்களில் மகா சொதப்பல் சொதப்பி வரும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் கப்டன். சாதாரண வீரர்கள் சொதப்பினால் ஓரமாக உட்கார வைக்கலாம். கப்டனே சொதப்பினால்? போகிற போக்கை பார்த்தால் ப்ரீத்தி ஜிந்தாதான் களமிறங்க வேண்டும் போல. இதுவரையான ஆட்டங்களில் மெகா சொதப்பல் அணியென்ற பெயரெடுத்துள்ள அணி மில்லரின் அணிதான்.

### கிளன் மக்ஸ்வெல்



டேவிட் மில்லரின் அண்ணனாகவோ தம்பியாகவோ வைத்துக் கொள்ளலாம் இவரை. ஒரே அணி. இந்த ஐ.பி.எல் சீசனில் இதுவரை ஒரேயொரு அரைசத்தம்தான் அடித்துள்ளார். பஞ்சாப் அணியில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட வீரர். மில்லர், மக்ஸ்வெல் என வரிசையாக சொதப்பினால் அணி உருப்படுமா? இதுதான் பஞ்சாபின் பிரச்சனை.

உலக மாஸ் வீரர் மக்ஸ்வெல். அடிக்கத் தொடங்கினால் மரணஅடியை தவிர வேறொன்றையும் அறியாதவர். பந்துவீச்சாளர்கள்பிச்சைவேண்டாம்நாயைப்பிடிஎன அலறியோடுவார்கள். இதுவரை அப்படித் தான் வரலாறு இருந்தது. இந்த ஐ.பி.எல் சீசனில் மட்டும்தான் அதற்கு பஞ்சமாக உள்ளது. ஆனால் பஞ்சாப் கப்டன் மில்லரை போலல்லாமல் ஒரு அரைச்சதமாவது அடித்து ஆறுதல் கொடுத்துள்ளார். ஆனால் மில்லரையும் அழைத்துக் கொண்டு பழைய நிலைக்கு மக்ஸ்வெல் வந்தால்த்தான் நொந்து போயுள்ள பஞ்சாப் ரசிகர்கள் தேறுவார்கள்.



# ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சார்பியல் கொள்கையின் உண்மை

விண்வெளி பாதையில் உள்ள இரண்டு கரும்புள்ளிகள் அல்லது நட்சத்திரங்கள் இணைவதன் மூலம் ஈர்ப்பு அலைகள் உருவாவதை சர்வதேச விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இதன் மூலம் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சார்பியல் கொள்கை உண்மை என மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற நோபல் பரிசு விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டின் 100 ஆண்டுகளுக்கு முன் கடந்த 1915ம் ஆண்டு ஈர்ப்பு விசை குறித்த சார்பியல் தத்துவத்தை இயற்பியல் விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் உருவாக்கினார். அதைத்தான் தற்போது சர்வதேச விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

விண்வெளியில் கருந்துளைகள் எனப்படும் நியூட்ரான் நட்சத்திரங்கள் ஒன்றோடு ஒன்று மோதும்போது (பெருவெடிப்பு) அவை இணைந்து ஈர்ப்பாற்றல் அலைகள் உருவாக்குகின்றன. இவை சுருங்கி விரிவடைவதன் மூலம் ஆற்றல் உந்தப்பட்டு உலகம் உருவானதாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ஓசைமயமான இந்தப் ஈர்ப்பாற்றல் அலைகள் பிரபஞ்சத்தின் ஒலிவழித்தடங்கள் என்று அழைக்கப்படுகின்றன. 'இந்த ஈர்பாற்றல் அலைகளின் விரிவாக்கம்தான் வெளியையும் காலத்தையும் உருவாக்குகின்றன, உண்மையில் வெளியும் காலமும் ஒன்றுதான்' என்ற சார்புநிலைக் கோட்பாட்டை (ரிலேட்டிவிட்டி தியரி) பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீன் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு கூறினார்

தற்போதுஇ அதன் மூலம் புவி ஈர்ப்பு அலைகள் இருக்கிறதா? இல்லையா? என்பதை அறிய சர்வதேச விஞ்ஞானிகளுடன் இந்திய விஞ்ஞானிகளும் பணியாற்றி வந்தனர். கடந்த 2015ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி அமெரிக்காவில் லூசியானா மாகாணத்தில் உள்ள லிவிங்ஸ்டன் என்ற இடத்தில் 'லிகோ டிடேக்டர்ஸ்' என்ற கருவி மூலம் புவி ஈர்ப்பு அலைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. மேலும்இ இரு கருந்துளைகள் மோதிக்கொள்ளும் போது மாற்றங்களையும் இந்த விஞ்ஞானிகள் குழு கண்டறிந்துள்ளது. அப்போது, நிகழும் சப்தத்தை இந்த குழு பதிவு செய்துள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் விண்வெளியைக் கண்களால் மட்டுமே ஆய்வு செய்துவந்த விஞ்ஞானிகள் இனி செவிகளாலும் அதனை மேற்கொள்வார்கள் என்று இக் குழுவைச் சேர்ந்த கொலம்பியா பல்கலைக்கழக விஞ்ஞானி ஸ்சாபோல்க்ஸ் மார்க்கா கூறினார். புவிஈர்ப்பு அலைகளை கண்டுபிடிப்பதில் இந்திய விஞ்ஞானிகளும் தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளனர். புனேவில் உள்ள சர்வதேச வானியற்பியல் மற்றும் வானவியல் பல்கலைக்கழகத்தில் இந்திய விஞ்ஞானிகள் இது குறித்த அறிவிப்பை முறைப்படி அறிவிக்கின்றனர்.

இந்த விழாவில் கஸ்துரி ரங்கன் உள்ளிட்ட 12க்கும் மேற்பட்ட மூத்த விஞ்ஞானிகள் பங்கேற்கின்றனர். இந்திய விஞ்ஞானிகள் ஆற்றிய இந்த சேவைக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். 'கருந்துளை 'உள்ளதா? இல்லையா? பல ஆண்டுகளாக நீடித்து வந்தது. புவி ஈர்ப்பு அலைகள் இருந்தால் "கருந்துளை பற்றிய மர்மமும் விலகும்.திரைப்படங்களில் வரும் ' டைம் மெஷின்' போன்ற கருவிகளின் பயன்பாடு பற்றியதன் விளக்கமும் ஏற்படும். மேலும் அகிலத்தின் அடுத்த பக்கத்தையும் அறிந்து கொள்ள முடியும் என கூறப்படுகிறது.

## கணனி வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள்

623 ஷிக்கார்ட் என்பவர் உருவாக்கிய முதல் மெக்கானிக்கல் கைக்குலேற்றர்.

1823 சார்லஸ் பேபேஜ் உருவாக்கிய அனலிடிக்கல் இயந்திரம். இந்த இயந்திரமே இன்றைய கணினிகளின் முன்னோடி என்று கூறலாம். சார்லஸ் பேபேயே கணினியின் தந்தை என்று சிறப்பு பெயர் பெற்றவர்.

1957 இன்றைய அனைத்து மொழிகளின் முன்னோடியான ஃபோர்ட்ரான் கணினி மொழி வெளியிடப்பட்ட ஆண்டு.

1971 ஸ்மால் டாக் எனப்படும் கணினி மொழி உருவானது. இது முழுக்க முழுக்க OOPS என்ற கொள்கையின் அடிப்படையில் உருவானது. இந்த கொள்கையின் அனைத்து சிறப்பம்சங்களையும் இதில் பயன்படுத்தலாம். இன்றைய ஜாவா மற்றும் சி++ OOPS ன் அனைத்து சிறப்பம்சங்களையும் பயன்படுத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் ஜாவா மற்றும், சி++ யை யை ஸ்மால் டாக்குக்கு குறைவாக எடைபோட முடியாது. OOPS ன் விரிவாக்கம் Object Oriented Programming System.

1972 சி என்ற மொழி உருவானது இதுவே இன்றை நவீன மொழிகளின் முன்னோடி என்று கூறலாம். இதை உருவாக்கியவர் டென்னிஸ் ரிட்ச்சி (Dennis Ritchie).

1975 கணினி உலகின் மிக பெரிய நிருவனமான மைக்ரோ சஃவ்ட் உருவான வருடம்.

1976 கணினி உலகின் மற்றொரு மிக பெரிய நிருவனமான ஆப்பிள் உருவான வருடம்.

1983 ஆப்பிள் நிருவனம் மௌசை உருவாக்கிய வருடம்.

1990 இனையதளம் உருவான வருடம். கணினி உலகில் தவிர்க்க முடியாத ஒன்று.

1995 இன்றைய நவீன கணினி உலகின் மிக பிரபலமான மொழியான ஜாவா உருவான வருடம். ஜாவாவை உருவாக்கியவர் ஜேம்ஸ் காஸ்லிங் (James Gosling) அன்று ஜாவா மொழியின் சொந்தக்கார நிருவனம் சன் மைக்ரோ ஸிஸ்டம் (Sun Microsystems) இன்று ஆரக்கல் (Oracle Corporation ) மைக்ரோசாஃப்ட் விண்டோஸ் 95யை அறிமுகப்படுத்திய வருடம்.

1998 இன்று கணினி உலகின் மிக பெரும் ஜாம்பவானாகிய கூகுல் நிருவனம் உதயமான வருடம்.

2000 உலகின் மிக பெரிய தகவல் களஞ்சியமான விக்கிபீடியா வெளியிடப்பட்ட வருடம். விக்கிபீடியா உல்கின் மிக பெரிய தகவல் பெட்டகம் என்பது குறிப்பிடத்தக்கது.

2004 சமூக இனையதளங்களில் முக நூல் (Facebook) பெரும் புரட்ச்சியை செய்த வருடம். இன்று முக நூல் கணக்கு இல்லாதவர்கள் மிக சிலரே.

## விடுகதைகள்

1. வெட்ட வெட்ட முளைக்குது. தைலமெல்லாம் கேட்குது. அது என்ன?
2. முப்பத்திரண்டு காவலாளி. நடுவில் ஒருசின்னப்பெண். அது என்ன?
3. உயிரோடு இருந்தால் சிவப்பு. இறந்ததும் கறுப்பு. அது என்ன?
4. ஆவணி பிறப்பது எதனால்? நாடகம் முடிவது எதனால்?
5. தீக்குளித்தாலும் திடமா இருப்பவன். நான் யார்?

**விடை**

*1. தலைமயிர் 2. நாக்கு 3. நெருப்பு*
*4. ஆடி முடிவதால் 5. செருப்பு*



செ.கிருஷாளினி
தரம்8
வ.பெரிய கோமரசன் குளம் ம.வி




## பொது அறிவு

**அறிவின் வகைகள்**

*ஒரு அறிவு உள்ளவை*
புல் கொடி செடி மரம்
*இரண்டறிவுள்ளவை*
தண்ணீரில் வாழும் உயிரினங்கள்
*மூன்றறிவுள்ளவை*
நிலத்தில் ஊர்ந்து செல்லும் நத்தை எறும்பு போன்றவை
*நான்கறிவுள்ளவை*
நிலத்தில் நடந்து செல்லும் மிருகங்கள்
*ஆறறிவு உள்ளவை*
எதையும் நினைத்தவுடன் செயற்படுத்தும் மனிதர்கள்




வ.லாவனியா
முருகனூர் சாரதா வித்தியாலயம்,
வவுனியா


கவலையை விடுங்கள்
கிக்விசன் கமராவை பொருத்துங்கள்!
புத்தாண்டுக்கு விஷேட விலைக்கழிவுகளும் உண்டு!
கை.தொ.இ. 077 593 0335
சன்சக்தி ரேடர்ஸ்
கிக்விசன் / HIKVISION World No.1
Rang by asmag Germany/Frankfurt in 2012 and 2014
and by IMS USA in 2012
விலை உயர்ந்தவை ஆனால் தரத்தில் பன்மடங்கு உயர்ந்தவை!.
4 கமராக்கள்
DVR, Power Supply,
BNC, DC jack
42,000/= இருந்து பெற்றுக்கொள்ளலாம்.




துள்ளியமான கண்காணிப்பிற்கு - கிக்விசன்!
நீண்டகால உழைப்பிற்கு - கிக்விசன்!
இரவு கண்காணிப்பிற்கு - கிக்விசன்!
கடின பாவனைக்கு - கிக்விசன்!
உயர்ந்த தரத்திற்கு - கிக்விசன்!
CCTV கமரா என்றலே - கிக்விசன்!
நல்ல சேவைக்கும் உங்கள் நம்பிக்கைக்கும் - நாம் - சன்சக்தி ரேடர்ஸ்/கிக்விசன்
SST - சன்சக்தி ரேடர்ஸ்
இல 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
தொ.இ. 021 221 7994 கை.தொ.இ.077 593 0335
www.sunsakthy.com Email info@sunsakthy.com



ரஷ்யாவை சேர்ந்த இந்த குசும்பர்தான் சொந்தமாக பியரை பைப்லைனில் பெறும் உலகின் ஒரே மனிதனாக இருப்பார். அண்ரே எரேமீவ் என் இவரது ஒரே ஆசை குழாயை திருகினால் பைப்பில் பியர் வர வேண்டும். இவரது வீட்டுக்கு கீழே பியர் கடை வந்ததும், அவர்களுடன் பேசி சம்மதத்தை பெற்றவர், அரச அனுமதியையும் பெற்று பைப்லைனில் வீட்டுக்கு பியரை கொண்டு சென்றுள்ளார்.



கடந்தவாரம் மாங்குளத்தில் தடம்புரண்ட பேரூந்து. அதற்கு மேல் ஏறியிருந்து வாலிபர் ஒருவர் கைத்தொலைபேசியில் மூழ்கியிருக்கும் காட்சி.




குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச தாய்லாந்து சென்றபோது ஹோட்டலொன்றில் நடந்த நிகழ்வில் கலந்து கொண்டார். அங்கு அவரை வரவேற்று வைக்கப்பட்ட பதாகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை வரவேற்பதாக குறிப்பிப்பட்டிருந்தது.

மைசூரில் நடக்கும் அதிசய சம்பவம் இது. அங்குள்ள கிராமமொன்றிலுள்ள இந்த ஆடு அங்கு நடக்கும் மரணச்சடங்குகள் அத்தனையிலும் கலந்து கொள்கிறது. இறந்தவரின் உடலை சுடுகாட்டிற்கு கொண்டு செல்லும் போது இந்த ஆடும் கூடவே சென்று, சடங்கை நிறைவேற்றிவிட்டு மக்கள் திரும்பி வரும்போதுதான் திரும்பி வருகிறது.





தைவான் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ள மனித படிமம். கையில் குழந்தையுடன்உள்ள தாயின் படிமம் இது. தைவானின் மத்திய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இது கண்டறியப்பட்டது. மொத்தம் 48 மனிதப்படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இவை 4,800 வருடங்கள் பழமையானவையாக இருக்கலாமென கருதுகிறார்கள்.



சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கட்டப்படும் கழிவறைகள் இவை. இங்கு இலவச வைபை வசதியும் உள்ளது. இனரநெற் வசதியுடன் கூடிய இந்த இலவச கழிவறைகள் மக்களை ஈர்க்குமென அதிகாரிகள் கூறுகின்றனர். இதுதவிர, கழிவறைகளின் அருகில் வாகனம், தொலைபேசி சார்ஜ் செய்யும் இடம், ஏரிஎம் எல்லாம் நிறுவ உள்ளனராம்.



வாகனங்களிற்கான DVD, Mp3 பிளேயர்கள், நெவி கேசன், ரிமோட் செட்கள், சென்ரல் லொக் சிஸ்டம், ரிவேசிங் சென்சர் வகைகள், வாகனங்களிற்கான ரிவேசிங் கமராக்கள், சகல வாகனங்களிற்குமான முற்புற, பிற்புற கண்ணாடி வகைகள், பெற்றரி வகைகள், மெருகூட்டு சாதனங்கள் என அனைத்தையும் பெற்றுக்கொள்ள யாழ். மாநகரில் நாட வேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்...

# அருள் விநாயகர் மோட்டோர்ஸ்
# ARUL VINAYAGAR MOTORS

சன் லங்கா ஓட்டோ ரேடர்ஸ் நிறுவனத்தின் ஏக விநியோகஸ்தர்கள்



இல. 108, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 9222 ; 077 305 3030

## தீபம் 16வது ஆண்டில்

CELEBRATING 16 YEARS

DEEPAM TV :
UK | EUROPE
MIDDLE EAST | CANADA

DEEPAM TV இல் விளம்பரங்களை மேற்கொள்வதற்கு அழையுங்கள்...



ஒரு மாதத்திற்கான விளம்பர கட்டணம் ரூபா. 15,500 இருந்து...

Contact : 077 476 5990
E-mail : ceo@deepam.lk

## அபி பஷன் வேல்ட்

ஒரு வருட கால பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் பரிசு மழையை வென்றிடுங்கள்



ரூபா. 10,000/- மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்கப்படும்

முதலாம் பரிசு : 1 பவுண் தங்க நாணயம்

இரண்டாம் பரிசு : குளிர்சாதனப் பெட்டி

மூன்றாம் பரிசு : தொலைக்காட்சிப் பெட்டி

மேலும் பல பெறுமதிமிக்க ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும் எனவே வாரீர் பரிசில்களை வென்றிடுங்கள்...

மே 1 முதல் மே 22 வரை

யாழ் மண்ணில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட அனைத்து ஆடைத்தெரிவுகளுடன் கூடிய மிகவும் பிரமாண்டமான புடவை மாளிகை...

ABI Fashion World
No, 112, K.K.S Road, Jaffna, Sri Lanka.
Tel : 021 2223738 | 077 324 6503

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 01.05.2016 அன்று வெளியிடப்பட்டது